செயப்படுபொருள். செயப்படுபொருள் குன்றாத வினைகள் வாக்கியங்களில் வரும்போது அவ்வினைகள் எவற்றைச் செய்ததாகக் குறிக்குமோ அவற்றைச் செயப்படுபொருளென்பர்.

[வினையோடு யாரை, எதை என்னும் வினாச்சொற்களைச் சேர்த்துண்டாம் வினாக்கட்கு விடையாவன செயப்படுபொருளாம்.]

(உ-ம்.) இராமன் மரத்தை வெட்டினான். [செயப்படுபொருள் விரிந்து நின்றது.]

மரத்தை வெட்டியவன் யாவன்?—இராமன் வெட்டினான். [இதில் மரத்தை யெனும் செயப்படுபொருள் தொக்கு நின்றது.]

இடைப்பிறவரல். உருபு, முற்றுகள், எச்சங்கள் இவற்றுக்கும் இவை கொண்டுமுடிகிற பெயர் வினைகளுக்கும் இடையே வரும் சொற்களாம்.

(உதாரணம்.)

அவன்வீட்டை மிகவும் பெரிதாகக் கட்டினான்.—உருபு இடைப்பிறவரல்.
தேறினான் நமது பாடசாலையிற் கற்றமாணவன்.—முற்று இடைப்பிறவரல்.
இங்குவந்த தீ காத்திரக் கொற்றன்.—பெயரெச்ச இடைப்பிறவரல்.
ஓடி அதிசீக்கிரமாய் வந்தான்.—வினையெச்ச இடைப்பிறவரல்.

அடைமொழி. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய ஆறும் பின்வருமொழிகளை யடுத்துவருதலாம். இவ்வடைதானும் இனவடை யெனவும் இனமற்றவடை யெனவு மிருபிரிவானது.

(உதாரணம்.)

நெய்க்குடம்—பொருள் இனவடை; உப்பளம்—பொருளினமற்றவடை.
துளநெல்—இடவினவடை; ஊர்மன்று—இடவினமற்றவடை.
நெய்க்குடம்—[இதற்கினமாய் மோர்க்குடம், பாற்குடம் முதலியனவுள.]
உப்பளம்—[வேறு அளம் யாண்டும் கண்டிலம்.]
எனவே, இவை இனவடை யெனவும் இனமற்றவடை யெனவுமாயின.

இடைப்பிறவரலும் அடைமொழியும் வாக்கியங்களிற் பெரும்பாலும் விரிந்தேவரும். அடைமொழி தொக்கிவரும் இடங்களில் அது அடையாகவரும் சொற்களும் பெரும்பாலும் தொக்கிவரும்.

எழுவாயாக வழங்கும் சொற்கள்.—

1. பெயர்ச்சொல். (உ-ம்.) அவன் பேசினான்.
2. வினாச்சொல். (உ-ம்.) எவன் பேசினான்?
3. தொழிற்பெயர். (உ-ம்.) ஈகை நன்று.
4. வினையாலணையும் பெயர். (உ-ம்.) பேசினவன் நின்றான்.
5. முற்றுறாச் சொற்றொடர். (உ-ம்.) மறந்தும் புறங்கூறாமை நன்று.
6. தனிவாக்கியம். (உ-ம்.) அவன் மறந்தும் புறங்கூறான் என்று விளங்கும்.

பயனிலையாக வழங்கும் சொற்கள்.—

1. பெயர்ச்சொல். (உ-ம்.) அது கண்ணாடி.
2. வினைச்சொல். (உ-ம்.) புறா பறந்தது; அது நல்லது.
3. வினாச்சொல். (உ-ம்.) அவன் யாவன்?
4. தொழிற்பெயர். (உ-ம்.) அது குதிரை ஓட்டம்.
5. வினையாலணையும் பெயர். (உ-ம்.) அவன்தான் வந்தவன்.
6. முற்றுறாச் சொற்றொடர். (உ-ம்.) ஈகையாவது அருத்தியில் இலனென்னாமுன் அளித்தல்.

செயப்படுபொருளாக வழங்கும் சொற்கள்.—

1. பெயர்ச்சொல். (உ-ம்.) அவன் மரத்தை வெட்டினான்.
2. வினாச்சொல். (உ-ம்.) அவன் எதை வெட்டினான்?
3. தொழிற்பெயர். (உ-ம்.) அவன் காத்தலை விரும்பினான்.
4. வினையாலணையும் பெயர். (உ-ம்.) பேசினவனைப் புகழ்ந்தார்.
5. தனிவாக்கியம். (உ-ம்.) அவன் மறந்தும் புறங்கூறான் என்றறிவேன்.

மேல் எழுவாய், பயனிலை, செயப்படுபொருளாக வழங்கும் பெயர், வினை, தொழிற்பெயர் முதலியன தனிமையாக வருதலேயன்றிப் பிறசொற்களால் தழுவப்பட்டு வருதலும் உண்டு. இவ்வாறு இவற்றைத் தழுவி வருவனவற்றிற்குத் 'தழுவுதொடர்' என வழைக்கலாம்.

பெயர் விளக்கட்குரிய தழுவுதொடர்கள்.—

1. பெயரெச்சம்.

(உ-ம்.) வந்த மனிதன் பேசினன். [எழுவாய்.]
பேசிய மனிதனைப் புகழ்ந்தனர். [செ. பொருள்.]
இவன் கொடுத்த மனிதன். [பயனிலை.]

2. வினைப்பகுதி—பகுதிவிகாரம்.

(உ-ம்.) விடுகணை கூரியது. [எழுவாய்.]
சுடுசோறு சாப்பிட்டான். [செ. பொருள்.]
இது கொல்யானை. [பயனிலை.]

3. பெயர்ச்சொல்.

(உ-ம்.) முருங்கைமரம் வீழ்ந்தது. [எழுவாய்.]
முருங்கைமரத்தை வெட்டினன். [செ. பொருள்.]
இது முருங்கைமரம். [பயனிலை.]

4. இடைச்சொல்.

(உ-ம்.) மற்றொருவன் வந்தான். [எழுவாய்.]
மற்றொன்றை எடுத்தான். [செ. பொருள்.]
இது மற்றொன்று. [பயனிலை.]

5. கு, இன், அது, கண் எனும் வேற்றுமையுருபேற்ற பெயர்கள்.

(உ-ம்.) உணவுக்கு ஆகாரம் இருந்தது. [எழுவாய்—(கு).]
மரத்தின்கண் கிளையை ஒடித்தான். [செ.பொருள்—(கண்)
அது அவனது வில். [பயனிலை—(அது).]

வினைமுற்றுக்குரிய தழுவுதொடர்கள்.—

1. வினையெச்சம்.

(உ-ம்.) அவன் எழுந்து பேசினன். [தெரிநிலை.]
அவன் உப்பின்றி யுண்டான். [குறிப்பு.]

2. வினைமுற்று எச்சம்போல் வருவன.

(உ-ம்.) கண்டனன் வணங்கினன்.

3. உரிச்சொல். (உ-ம்.) அவன் சாலப்பேசினன்.

4. இடைச்சொல். (உ-ம்.) 'மற்றறிவாம் நல்வினை.'

5. ஐ, ஆல், கு, இன், கண் எனும் வேற்றுமையுருபேற்ற பெயர்கள்.

(உ-ம்.) அவன் நாயை அடித்தான். [ஐ]
அவன் வாளால் விழுந்தான். [ஆல்]
அவனுக்குக் கொடுத்தான். [கு]
வாய்மையின் பிழைத்தான். [இன்]
நீர்க்கண் குதித்தான். [கண்]

தொழிற்பெயர் வினையாலணையும்பெயர்கட் குரிய தழுவுதொடர்கள்.—

1. பெயரெச்சம்.

(உ-ம்.) அவன் கண்ட காட்சி மிகவும் சிறந்தது. இங்குவந்த நல்லன் மிகவும் சிறந்தவன்.	எழுவாய்.
அவன் பேசிய பேச்சைப் புகழ்ந்தனர். நீ கண்ட ஆக்கியோனை அவமதித்தனர்.	செ. பொருள்.
அது நீ கண்ட காட்சி. இவன் நீ கூறிய பெரியோன்.	பயனிலை.

2. வினையெச்சம்.

(உ-ம்.) கண்டு வருதல் நல்லது. கண்டு வந்தவன் வணங்கினன்.	எழுவாய்.
அவரைத் தரிசித்து வருதலை விரும்பினன். அவரைத் தரிசித்து வந்தவனை இகழ்ந்தான்.	செ. பொருள்.
இதுவே தெரிந்து செய்தல். இவனே நடந்து வந்தவன்.	பயனிலை.

3. ஐ, ஆல், கு, இன், அது, கண் எனும் உருபுகளேற்ற பெயர்கள்.

(உ-ம்.) இவன் வீட்டை இடித்தல் கண்டேன். [ஐ]
அவன் இராமனை வாளால் வெட்டியவன். [ஆல்]
இப்பொருளை அவனுக்குக் கொடுத்தல் நன்று. [கு]
இவன் கோபுரத்தின் (நின்று) வீழ்ந்தவன். [இன்]
அச்சிறப்பினதுதான் அவனது பேச்சு. [அது]
இவன் காலைக்கண் வருபவன். [கண்]

மேற்கூறிய தழுவு தொடர்கள் பிற தழுவு தொடர்களையடுத்து வருதலுமுண்டு.

வாக்கியங்களின் முடிபு நோக்கியும் பொருள் நோக்கியும் வாக்கியங்களைப் பலவாறாகப் பிரிக்கலாம். அவையாவன :—

முடிபு நோக்கிப் பிரித்தல் :—

1. செய்பொருள் குன்றிய வாக்கியம் : இதனை 'அகர்மக வாக்கியம்' என்பர்.

கர்த்தா செயப்படுபொருள் குன்றியவினை கொண்டு முடிவது.

(உ-ம்.) காகம் பறந்தது.

2. செய்பொருள் குன்றாவாக்கியம் : இதனை 'சகர்மக வாக்கியம்' என்பர்.

கர்த்தா செயப்படுபொருள் குன்றாவினை கொண்டு முடிவது.

(உ-ம்.) இராவணன் சடாயுவை வெட்டினன்.

3. இருவினை வாக்கியம் : இதனை 'துவிகர்மக வாக்கியம்' என்பர்.

கர்த்தா செய்பொருள் குன்றாப் பிறவினைகொண்டு முடிவது.

(உ-ம்.) ஆசிரியர் மாணாக்கனைப் பாடத்தைப் படிப்பித்தார்.

4. செய்பொருள் வாக்கியம் : இதனைக் 'கர்மணி வாக்கியம்' என்பர்.

செயப்படுபொருள் கர்த்தாவாக நின்று செயப்பாட்டு வினை கொண்டு முடிவது.

(உ-ம்.) அரசனால் கோவில் கட்டப்பட்டது.

5. இருவினைச் செய்பொருள் வாக்கியம் : இதனை 'துவிகர்ம கர்மணி வாக்கியம்' என்பர்.

மேல் இருவினை வாக்கியத்திலுள்ள ஒரு செய்பொருள் கர்த்தாவாக, மற்றொன்று செய்பொருளாய் செயப்பாட்டுப் பிறவினை கொண்டு முடியும்.

(உ-ம்.) ஆசிரியரால் மாணுக்கன் பாடத்தைக் கற்பிக்கப்பட்டான்.

6. எச்சவாக்கியம்: இதனை 'காரக வாக்கியம்' என்பர்.

பெயர்கள் வெவ்வேறு எச்சவினைகளைச் சேர்ந்து இறுதியில் ஒரு வினைமுற்றுகொண்டு முடிவது.

(உ-ம்.) 'பரமசிவன் ஓர் வரத்தைககொடுத்து, நாராயணனால் அசுரனைக் கஞ்சித், தோலிட்ட சிறுமையினீங்கித், தனதுவப்பாற் கயிலைக்கட்சென்றான்.'

7. அடுக்குவாக்கியம்: முற்று, எச்சம் இவை பல அடுக்கி வரினும் இறுதியில் முடிக்குஞ்சொல்லாகிய பயனிலையொன்று வர, அனைத்தும் முடிந்து நிற்பது.

(உ-ம்.) 'பொரிவ தீவ புகைவ புழுங்குவ
எரிவ காந்துவ வேங்குவ தேங்குவ
இரிவ சோருவ ஏகுவ மீளுவ
திரிவ நிற்ப திகைப்ப சராசரம்.' —முற்றடுக்கு.

'கண்டு கேட்டுண் டுயிர்த்துற்றறியு மைம்புலனும்.' —வினையெச்சவடுக்கு.

பொருள் நோக்கிப் பிரித்தல்:—

1. ஒரு காரியத்தை யுடன்படுத்தும் எதிர்மறுத்தும் ஆம், அல்ல வெனக் கூறும் துணிவுரை வாக்கியங்கள்.

(உ-ம்.) அவன் படிப்பான். [உடன்படுத்து ஆம் எனக்கூறும் துணிவுரை வாக்கியம்.]
அவன் படியான். [எதிர்மறுத்து அல்லவெனக் கூறும் துணிவுரை வாக்கியம்.]

2. ஏவல் வாக்கியங்கள்.

(உ-ம்.) (நீ) செய்.
(நீவிர்) செய்மின்.

3. வாழ்த்தல், இரத்தல் முதலியபொருட்களில் வரும் வியங்கோள் வாக்கியங்கள்.

(உ-ம்.) அரச, வாழ்க. [வாழ்த்துப் பொருள்.]
அரச, தருக. [இரத்தல் பொருள்.]

4. வினா வாக்கியங்கள்.

(உ-ம்.) இராமன் வந்தனனோ?

5. வியப்பு வாக்கியங்கள்.

(உ-ம்.) என்னே இவன் திறம்!

எனவே வாக்கியத்தின் இலக்கணம் இவ்விரண்டையும் சார்ந்தது.

'அவன் பாடத்தைப் 'படிப்பான்' என்பது சகர்மகத் துணிவுரை வாக்கியம்.

இவ்வாறே பிறவாக்கியங்கட்கும் இலக்கணம் கண்டுகொள்க.

வாக்கியம். தனிவாக்கியமெனவும் தொடர்வாக்கியமெனவும் இருபிரிவாம்.

தனிவாக்கியம். ஒரு எழுவாயும் ஒரு பயனிலையுமுடையதாய், செயப்படுபொருள் ஒன்றும் பலவும் பெற்றும் பெறாதும், எழுவாய், பயனிலை, செயப்படுபொருட்கள் அடையும் தழுவுதொடரும் அடுத்தும் அடாதும் வருவதே தனிவாக்கியமாம்.

(உதாரணம்.)

குதிரை ஓடினது. [செயப்படுபொருளின்றி வந்தது.]

இராமன் குதிரையை அடித்தான். [செயப்படுபொருள் பெற்று வந்தது.]

நேற்றுவந்த மனிதன் நமது முற்றத்தில் நின்ற குதிரையை ஓங்கி ஓங்கி மிகவும் அடித்து வருத்தினான். [எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் மூன்றும் அடையடுத்து வந்தன.]

தொடர்வாக்கியம். தனிவாக்கியங்கள் இரண்டும் பலவும் சேர்ந்து ஒரு வாக்கியமாவது தொடர்வாக்கியமெனப்படும்.

(உ-ம்.) 'அதுகேட்டு இனித் தவஞ்செய்து யானும் இதனைப் பெறுவனென்று தன்மாட்டு வேட்கையால் தவஞ்செய்யும்'—நக்கீரர்.

['யானும் இதனைப்பெறுவன்,' '(அவன்) தவஞ்செய்யும்' எனும் இரு தனிவாக்கியங்கள் சேர்ந்து தொடர்வாக்கியமானது.]

இவ்வகையான வாக்கியங்களுள் ஒன்று முக்கியமானதாகவும், மற்றவை அதனைச் சார்ந்தும் வரும். அவற்றுள் முக்கியமான வாக்கியத்தை தலைவாக்கியமெனவும் மற்றவற்றை சார்பு வாக்கியங்களெனவும் வழங்க.

(உ-ம்.) மேற்கூறிய வாக்கியத்தில் 'தன்மாட்டு வேட்கையால் தவஞ் செய்யும்' என்பது தலைவாக்கியம்.

'அதுகேட்டு இனித் தவஞ்செய்து யானும் இதனைப் பெறுவன்' என்பது சார்புவாக்கியம்.

தலைவாக்கியங்களே இரண்டும் பலவும் சேர்ந்து வருதலுமுண்டு. அவையும் தொடர்வாக்கியமேயாம்.

(உ-ம்.) அவன் கொடுக்கவும் செய்வான்; எடுக்கவும் செய்வான்.

பிரகரணச்சமைவு.

(*Structure of Paragraphs.*)

பிரகரணம். ஒரே விஷயத்தைப்பற்றிக் கூறுகிற பலவாக்கியங்கள் ஒன்று சேர்வதே பிரகரணமாகும்.

ஒன்றையொன்றடுத்த வாக்கியங்களின் விஷயபேதத்திலும் அவ்வாறுள்ள பிரகரணங்களிலுள்ள விஷயபேதம் அதிகம்.

பிரகரணத்தில் முக்கியமாய் கவனிக்கவேண்டியவை :—

1. பிரகரணத்தின் வாக்கிய சம்பந்தம் அல்லது தொடர்ச்சி. வாக்கியங்கள் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டனவாய் தொடர்ந்து வந்திருக்கவேண்டும். பின் வாக்கியத்தை முன் வாக்கியத்தோடு சம்பந்தப்படுத்தக்கூடிய பதங்கள் தமிழ்ப்பாஷையில் பலவுள. அவை வருமாறு :—மேலும், திரும்பவும், பின்பு, எனினும், என்றாலும், ஆனால், அன்றேல் முதலியன.

சில சொற்றொடர்களும் வழங்கும். அவையாவன :—இவ்வாறிருக்க, இவற்றுள், அதற்குமாறாக, சுருங்கக்கூறின், இதுவரை, கடைசியாக, திரட்டிக்கூறின் முதலியன.

மேற்கூறிய பதங்களும் தொடர்களும் இன்றியும் வாக்கியங்கள் சம்பந்தப்படுவதுண்டு.

2. விஷய சிலாக்கியம். அதாவது ஓர் பிரகரணம் எவ்விஷயத்தைப்பற்றிக் கூறுமோ, அவ்விஷயமானது அப்பிரகரணத்திலுள்ள வாக்கியங்களில் முக்கியமான பாகமாக இருத்தல் வேண்டும். அவ்விஷயத்தை விட்டு பிறிதோர் விஷயத்தை அதே பிரகரணத்தில் முக்கியப்படுத்திக்கூறல் தவறாம்.

இதற்குதாரணமாகத் திருவள்ளுவரைப்பற்றிய நூலில் திருக்குறள் மகிமையைக் கூறுமிடத்துள்ள அடியில்வரும் பிரகரணத்தைக் கவனிக்கலாம்.—

"(1) திருக்குறளும் தொல்காப்பியமும் ஆகிய இரண்டுமே, சிதைவுறாமல் இப்பொழுது வழங்கும் நூல்கள் எல்லாவற்றினும் முற்பட்டனவாம். (2) திருக்குறளுக்குப் பன்னெடுநாள் பிற்பட்டவையெல்லாம், எத்தனையோ வேறுபாடுற்றுப், பற்பலவிடங்களில் ஆசிரியர்வாக்கு இதுவேயென்று துணியலாகாதவாறு மாறிவிட்டனவாகவும், ஆயிரத்தெண்ணூறு யாண்டுகளாக ஒரெழுத்தும் சிதைவுறாமல் வழங்கிவருவதே, இந்நூலின் பெருமையை உணர்த்துவதன்றியும், இஃது என்றும் அழியாது நின்றுநிலவும் என்பதற்கும் சான்றாகின்றது. (3) இஃது இங்கிலீஷ், ப்ரெஞ்சு, ஜர்மனி, லாடின், தெலுங்கு முதலான பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுப் பலதேசங்களினும் வழங்கிவருகின்றது. (4) திருவள்ளுவர் தமிழர்க்குச்செய்த உபகாரம் உலகினர்க்கே செய்த மஹோபகாரமாகிவிட்டது. (5) இந்நூலாசிரியரைத் தமிழர், பிரமனுடைய அவதாரமென்றெண்ணி இவரைத் தெய்வப்புலவர் என்கின்றனர். (6) கிறிஸ்தவர்களுக்கு விவிலியநூலும், துருக்கர்களுக்குக் குரானும், புத்தர்களுக்குத் திரிபிடகமும், பிராமணர்களுக்குச் சதுர்வேதமும் எங்ஙனம் ஸர்வோத்கிருஷ்டமோ, அங்ஙனமே தமிழர்களுக்குத் திருக்குறள் ஸர்வோத்கிருஷ்டமாம்." (செல்வக்கேசவராய முதலியார்.)

இப்பிரகரணத்தில் கூறப்புகுந்த விடயம் திருக்குறளின் பெருமையாகும். முதல்வாக்கியத்தில் திருக்குறள் ஏனைய நூல்களினும் முற்பட்டதென நவின்றார். 2-ல் பிறநூல்களோடு ஒப்பிட்டு அதனால் பெருமையை விளக்கினார். 3-ல் இந்நூல் பிறபாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் பெருமையைக் கூறினார். 4-ல் திருவள்ளுவர் தமிழுலகுக்குப் பயந்த உபகாரமாகிய குறள் உலகிற்கெல்லாம் உபகாரமாயதென, மேல் 3-ல் கூறியதன் பயனைக் காட்டினர். 5-ல் இந்நூல் பெருமை காரணமாக இதன் ஆசிரியரடைந்த பெருமையை விளம்பினர். 6-ல் பிறமதஸ்தரால் மகாபரிசுத்த முடையவெனக் கொண்டாடப்படும் நூல்களோடொப்பிட்டு, இந்நூலும் அத்துணைச் சிறப்புடைத்தென வற்புறுத்தினர்.

இவ்விதமாக இப்பிரகரணத்தின் ஒவ்வோர் வாக்கியமும் இதில் கூறப்புகுந்த விடயமாகிய குறளின் பெருமையையே தனது முக்கிய கருத்தாகக்கொண்டு விளங்கினமை வெளிப்படையாகின்றது.

3. **முதற்கூற்று.** ஒவ்வோர் பிரகரணத்திலுமுள்ள முதல் வாக்கியம அப்பிரகரணத்தில் இன்னவிஷயத்தைப்பற்றிக் கூறப்படுகின்றதென்பதை முன்னறிவித்தல் வேண்டும்.

'பாரதஸாரம்' என்னும் நூலிலுள்ள இப்பிரகரணம் இவ்விஷயத்தில் கவனிக்கப்படத்தக்கது.—

"யாம் உண்பனவும் தின்பனவும், சூரியவெப்பத்தினாலும் ஒளியாலுந் தானுண்டாகின்றன. சூரியனுடைய உதவியினாற்றான் நிலத்திட்ட வித்து முளையாதலும், முளை பெரும்பயிராதலும், அப்பயிர் செந்நெல் முதலிய தானியங்கள் நிறைந்த கதிராதலும், அக்கதிர்தான் நமக்குணவாதலுமாம். 'பிரமன் நினைத்தால் வயதுக்களவில்லை' என்பதற்கேற்பக், கதிரவன் நினைக்கும் பக்ஷத்தில், ஒருநொடியில் வித்தும் கதிராவதற்கென்ன? அதற்கவனருள் வேண்டும். தன்னுடைய பக்தன் சுயநலங்கருதாது மற்றவர்களுடைய துன்பத்தை ஒழிக்கவெண்ணித் தன்னைத் தியானிப்பானேயாகில், தருமருக்குதவியதுபோல் அந்த பக்தனுக்கும் சூரியபகவான் உதவுதற்கு யாது தடை?" (குப்புசாமி முதலியார்.)

'இப்பிரகாணத்தில் சூரியனே எல்லாவற்றிற்கும் காரணம் எனக் கூறப்போந்தவர், முதல்வாக்கியத்திற்றானே அக்கருத்தைத் தெள்ளிதின் விளக்கிக் கூறுவாராயினர்.

4. விஷயமாறாமை. ஓர் பிரகாணத்திலுள்ள வாக்கியங்கள் பலவும், ஒரே விஷயத்தைப் பற்றியே கூறவேண்டும். ஒரே பிரகாணத்தில் ஒருவாக்கியம் ஒரு விஷயத்தைப்பற்றியும், அடுத்த வாக்கியம் பிறிதொரு விஷயத்தைப்பற்றியும் கூறுதல் ஒண்ணாது.

இதனடியிற்கண்ட பிரகாணம் கலித்தொகைப் பதிப்புரையிற் காணக்கிடக்கின்றது.—

"இதனால் இவரினும் (நச்சினார்க்கினியர், சேனாவரையர், பரிமேலழகர்) தமிழ்வல்லோர் இருந்திலரொன்று சொல்லப்புகுந்தேனல்லேன். அகத்திய மஹாமுனிவர் வரத்திற்றோன்றி மிகக் கூரிய விவேகமும், வடகலைப் பயிற்சியும், நுண்ணிய தமிழறிவுமுடையராய், ஸ்ரீ கைலாச பரம்பரைத் திருவாவடுதுறையிலெழுந்தருளி விளங்கிய சிவஞான சுவாமிகள் இவரையும் புறங்காண வல்லரென்பது, அவர் சங்கர நமச்சிவாய தேசிகரியற்றிய நன்னூல் விருத்தியுரையிற் செய்த திருத்தங்களானுந், தொல்காப்பிய முதற்சூத்திரத்திற்கு விரித்துரையாக இயற்றிய தொல்காப்பியச் சூத்திரவிருத்தியானும் நன்கு துணியப்படும். ஆயினும் இலக்கிய இலக்கணங்களுள் யாதாயினுமோர் அரியபெரிய நூற்கு அவர் உரையெழுதாமையானும், சித்தாந்த சாத்திரத்தை விளக்குதலே முக்கிய கருத்தாயினுந், தமிழின் சிறப்பும் அதன் நுண்மையும் அருமையும் இடந்தொறுஞ்சொலிக்க அவர்செய்த 'சிவஞானபாடியம்,' அவ்வாதீனத்து மடாதிபதிகட்கு ஓர் இரத்தின மகுடமாய்க் கிடந்து துலங்கப் பெறுவதன்றித்தமிழ்ப்புலவர் கைக்கு அகப்படாமையானும், அவர் சாமர்த்தியத்துக்குத்தக்க பெரும்பயனைத் தமிழுலகம் அடைந்திலது."

(சி. வை. தாமோதரம் பிள்ளை.)

இப்பிரகாரணத்தில் நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்க்கு மிஞ்சிய கல்வித் திறனுடையாருளரெனக் கூறப்போந்தவர், அதனை ஒவ்வோர் வாக்கியத்திலுமமைத்தும், பிறிதோர் விடயத்தை யிடை நுழையாதும் வரைந்தனர்.

5. விஷயவமைவு. ஓர் பிரகாரணத்தில் கூறப்படுகிற விஷயத்தை எவ்விதமாய் ஒழுங்குபடுத்திக் கூறின் கேட்போர்க்கும் வாசிப்போர்க்கும் அது மிக்க பயனையளிக்கும், அவர் மனதில் எளிதிற் பதியும் என்பதனைக் கவனித்து அதற்கேற்றவாறு விஷயத்தை ஒழுங்குபடுத்திக் கூறவேண்டும். ஒவ்வோர் விஷயத்திற்கும் ஒவ்வோர் விதமான ஒழுங்குண்டு. அவ்வொழுங்கைக் கையாடல் வேண்டும்.

உதாரணமாக, ஒரு மனுஷனைப்பற்றிக் கூறுபவர், முதலாவது, அம்மனிதனின் தேகவமைப்பு, குடாகாத்திரம், வெளித்தோற்ற முதலியவற்றைக் கூறிப், பின் அவன் இயற்கையறிவு, அவன் தன் சுயப்பிரயாசத்தினாலடைந்த அறிவு, சிலாக்கிய முதலியவற்றை யுரைத்துக், கடைசியாக, அவனது ஒழுக்க முதலியவற்றைக் கூறல் சரியாம். இவ்வொழுங்குக்கு மாறாக வுரைத்தல் அத்துணைச் சிறப்புடைத்தன்று.

இவ்வகையமைவு அடியில்வரும் பிரகாரணத்தில் நன்கு வெளியாம் :—

தமிழர்கள், ஐரோப்பியரையும் வேறுசிலரையும் போல உயரமும் உடலூரமும் பெற்றவர்களல்லராயினும், அதிக அந்த சந்தமுடையவர்களாய், ஆரியருடைய முகவிலாசத்தை ஒத்த உருவமைந்தவர்களான ஒரு தனிக்கூட்டத்தினர் எனப்படுகின்றனர். இவர்கள் கோபுரம்போன்றதாய் நுனிகூரிய மூக்கினையும் கரிய மயிரினையும் கண்ணினையும் உடையவர்கள். இவர்களுக்கு வாய் பெரிதாகவும் உதடு தடித்தும் இருக்கும். முகம் அண்டாகாரமானது. போர்புரிவதில் ஏனை இந்தியரைக் காட்டில் மிக்க திறமுடையவர்களென்று சில ஆங்கிலேய தண்டத்தலைவர்கள் தமிழரைப் புகழ்ந்து பேசியிருக்கின்றனர். இவர்களுக்குப் 'பழையது மிகுந்த இடமே காணியாட்சி.' எங்குப் பொருளீட்ட இயலுமோ அங்கு இவர்களைக் காணலாம். ஆயினும், இவர்கள் சுவதேசாபிமானம் குறைந்தவரல்லர்; பொருளீட்டிக்கொண்டு சொந்த வூரை யடைந்து சுகம்பெற்றிருக்க வேண்டுகின்றவர்களே. வரவிற்கேற்றச் செலவு செய்யும் குடித்தனப்பாங்கு உடையவர்களேயாயினும், தமிழர்கள் தான

தருமங்களை வெகுவாய்க்கொடுக்கின்றவர்களேயன்றி, வெகுவாய் ஏற்கின்றவர்களல்லர். இருந்த இடத்திலே இருந்து வீண்காலம் போக்காமல், இவர்கள் கஷ்டசாத்தியமான காரியங்களையும் சாதிப்பார்கள் : எத்தனை கஷ்ட நிஷ்டூரங்களையும் அதிக பொறுமையுடனே ஈடுகொடுத்துத் தாங்குவார்கள். ஒருவரையொருவர் காணுமிடத்து இவர்கள் மேரை மரியாதை தப்புகிறதில்லை. இவர்களில் அனேகர் வெகு விசித்திரமான ஞாபகசக்தி யுடையவர்கள் என ஐரோப்பியரே மெச்சிக்கொள்ளுகின்றனர். கற்புவிஷயத்தில் பெண்பாலினர் பெரும்பான்மையாய்க் கண்ணுங்கருத்துமா யிருப்பவர்கள். இல்வாழ்க்கையில் நேரும் இன்னலிடைஞ்சல்களையும் பாராட்டாமல் எவ்விதத்திலும் கணவருடன் இணங்கி நடப்பது இவர்கள் சுவபாவமாக இருக்கின்றது. ஆண்களிலும் பெண்களிலும் சிற்சிலரிடத்தில் பொய்ம்மை, சிற்றின்பவிருப்ப முதலிய துர்க்குணங்கள் உள்ளன. தமிழர்களுடன் நெருங்கிப்பழகிய கோவர் என்னும் ஆங்கிலேயர், "உண்மை உழைப்பு, கற்பு, நடுவுநிலைமை முதலானவற்றைக் கடவுளர் வெறுப்பினும், இவர்கள் வெறார் : குடும்ப அமைதிக்கும் க்ஷேமத்துக்கும் சாதனமான மர்மங்கள் இவைகளே என்பது தமிழர்களுக்குக் கைவந்தவிஷயம்" எனச் செப்பியிருக்கின்றார்.

("தமிழ்" *by Chelvakesavaroya Mudaliar.*)

நிறுத்தலளவைக் குறிகள்.

(*Punctuation.*)

நிறுத்தலளவைக் குறிகளானவை வாசகத்தில் பொருள் தெள்ளிதின் விளங்குமாறு நிறுத்தி வாசித்தற்பொருட்டு ஆங்காங்கே வழங்கப்படும் குறிகளாம்.

தமிழ்ப்பாஷையில் இக்குறிகள் ஆதியிலிருந்தே வழங்கிவந்தனவல்ல. இது தமிழுக்குற்றதோர் குறையேயோவெனச் சிலர் கருதுவர். அன்று; என்னை? இக்குறிகள் பெரும்பாலும் வழங்குமிடம் யாதோ? வாசகநடையிலன்றோ. பூர்வம் திராவிடராய நம் முன்னோர் வாசகநடையை யொருசிறிதும் கையாடாராய் எழுதுவதும், ஓரோவிடங்களிற் பேசுவதும் தானும், செய்யுள்மூலமா யியற்றிவந்தனர். அங்ஙனம் செய்யுட்கையாட்சி செய்வார்க்கு இக்குறிகள் பெரிதும் அவசியமெனத் தோன்றியனவல்ல. எனவே அவற்றை வழங்காதிருந்தனர்போலும். எனினும், பிற்காலம் போந்தாரும் தற்காலமுள்ளோரும் செய்யுட்பிராந்தி சிறிது மறந்து வாசகநடையையே பரிபாலிப்பாராயினர். அங்ஙனம் பரிபாலிப்பார்க்கு இக்குறிகள் அவசியமாதல் நோக்கி அவற்றைக் கீழ்வரைவாம்.

இவை , **காமா**, கால்புள்ளி, ஒருமாத்திரை நிறுத்தம்;
; **செமிக்கோலன்**, அரைப்புள்ளி, இருமாத்திரை நிறுத்தம்;
: **கோலன்**, முக்காற்புள்ளி, மும்மாத்திரை நிறுத்தம்;
. **புள்ஸ்டாப்**, முழுப்புள்ளி, நான்மாத்திரை நிறுத்தம்; என்பனவாம்.

காமா, கோலன் எனும் ஆங்கிலப்பதங்களை திசைச்சொற்களாகக்கொண்டு தமிழில் வழங்கின் இழுக்கென்னை?

காமா, கால்புள்ளி, ஒருமாத்திரை நிறுத்தம்.—

வாக்கியங்களில் பொருள் விளங்குமாறு சிறிது நிறுத்தற்கென வழங்குகின்ற ஓர்குறி. இது வழங்குமிடங்கள் :—

1. பலசொற்கள் ஒன்றாய் எண் இடைச்சொற்களால் இணைக்கப்பெறாது வரும்போது.—

(உ-ம்.) "அன்புடையரான குணம் யாவையோவெனின், சாவிற் சாதல், நோவினோதல், ஒண்பொருள் கொடுத்தல், நன்கினிது மொழிதல், பிரிவு நனியிரங்கல் என இவை."—**நக்கீரர்.**

"காப்பென்றது தாய் துஞ்சாமை, நாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, காவலர் கடுகுதல், நிலவு வெளிப்படுதல், கூகை குழறல், கோழி குரற்காட்டல் என இவை."—**நக்கீரர்.**

"அட்டில், கொட்டகாரம், பண்டசாலை, கூடகாரம், பள்ளியம்பலம், உரிமையிடம், கூந்தப்பள்ளி யென இவற்றுள் நீங்கி."—**நக்கீரர்.**

எண்ணிடைச் சொற்களால் இணைக்கப்படும்போது இடையில் மாத்திரை நிறுத்தம் வழங்காது.

(உ-ம்.) "பெண் என்பது ஐயும் பித்தும் வளியும் குடரும் கொழுவும் புளியும் நரம்பும் மூத்திரபுரீடங்களும் என்று இவற்றதியைபு பொருளன்று பொருளாயிற், பூவே சாந்தே பாசே எண்ணெயே அணிகலமே என்றிவற்றாற் புனையவேண்டா, தான் இயல்பாக நன்றாயின்"—**நக்கீரர்.**

2. ஒரே வாக்கியத்தில் பல வினைப்பிரயோகங்கள் தம்முடன் சேர்ந்த பல சொற்களுடனேனும் தனித்தேனும் வரும்போது.—

(உ-ம்.) "வரவிற்கேற்ற செலவு செய்யும் குடித்தனப்பாங்கு உடையவர்களேயாயினும், தமிழர்கள் தானதருமங்களை வெகுவாய்க் கொடுக்கின்றவர்களேயன்றி, அவைகளை வெகுவாய் ஏற்கின்றவர்கள் அல்லர்."—**செல்வகேசவராய முதலியார்.**

"அங்ஙனம் நிற்பத், தலைமகளுந் தன் குழற்கற்றைப் பொறையுங் கோதையுந் துயல்வரக், கொடியிடை நடுவுதளரப், பைம்பொற்றோடு மின்னுப்படைப்ப, அரவவண்டறையுந் தாமரை யகவிதழ் புரையும் அஞ்செஞ்சீரடிமேற் செம்பொற் சிலம்பரற்ற, அன்னம்போல மென்மேல் ஒதுங்கிக், காமவல்லிக் கொடியுங் கற்பகக்கொழுந்தும் நடப்பதென நடந்து சென்று, ...பூகாறுகொழுநிழலிருந்தாள், தான் இயல்பாக நன்றாயின்."—**நக்கீரர்.**

3. உவமைவிளக்க வரும் 'போல' முதலிய உவம உருபுகளையடுத்து உவமானத்தோடு பலசொற்கள் அடுத்துவரும்போதும்.—

(உ-ம்.) "விளக்கு வருதலும் இருணீக்கமும் உடனே நிகழும். அது போலக், காட்சியும் ஞானவொழுக்கக் குணங்களது தன்மை யழிவும் உடனே நிகழும்."—நக்கீரர்.

"மூன்று கண்ணையுடைய இறைவன் மூன்றெயிலையுங் கோபிக்க, அவன்முகம் ஆறுமாறுபோல, ஒள்ளிய ஞாயிறு சுடுகையினாலே, வரைபிளந்து பிறராற் சீறுதற்கரிய மழுவையுடையோன் சினக்கையினாலே அந்தமுப்புரம் அழித்தலைப் பெற்று உதிர்வனபோலப், போவார்க்கு வழியில்லையாக வீழ்ந்து குறுக்கிட்டுக்கிடந்த வெம்மை விளக்குந் தொலையாத வழியிடையே,.........பொருள்வயிற் பிரியத் துணிந்தீர்."—நச்சினார்க்கினியார்.

"தம்மீது பொறித்துள்ள அரசமுத்திரையானது சிறிது சிறிதாய் முகந்தேய்ந்து செல்லாத காசுகள் ஆகிவிடுமாறு போலே, சொற்களும் வழக்காற்றில் பண்டித பாமரர்களிடத்துச் செல்லாதனவாகிக் கழிவுறுகின்றன."—செல்வகேசவராய முதலியார்.

உவமை உருவகமாய் உவமேயம் யாதும் சொற்களடுத்து வராது வருமேல் இக்குறி வழங்காது.

(உ-ம்.) "அலரென்பது அப்பெரும்போது தாதும் அல்லியும் வெளிப்பட மலர்ந்தாற்போல நிற்கும் நிலைமை யென வேற்றுமை சொல்லப்பட்டதாம்."—நக்கீரர்.

4. கடாவிடையுள் ஒருவாக்கியத்துத் தீர்க்கிப்பது போல எழுதும்போது அன்றேல், பின்னும், ஆதலின், ஆதலால், அஃதேல், அல்லது, எனின் முதலிய பதங்களை யடுத்தும்.—

(உ-ம்.) "அது பொருந்தாது ; என்னை காரணமெனின், இரவுக் குறிக்கே சொல்லினமையால்."—நக்கீரர்.

5. லக்ஷணிப்பு அல்லது விஸ்தரிப்புக் கூறுமிடத்து என்பது, அதாவது முதலிய சொற்களை யடுத்தும்.—

(உ-ம்.) "அறமென்பது, இல்லறம் துறவறம் என்னுமிரண்டுமாம்."

6. வாக்கியங்கள் ஒன்றேனும், பலவேனும் ஒருவினைக்கு எழுவாயாக, செயப்படுபொருளாக வரும்போது ஒவ்வோர் எழுவாய் அல்லது செயப்படுபொருளை யடுத்தும்.—

(உ-ம்.) "அக்காலத்தில் சிறந்த செல்வான்கள் பலரிருந்தனரென்பதும், வாகனங்கள் செல்லலான வீதி முதலியன இருந்தனவென்பதும், இவ்வாகனங்களேயன்றி கோவேறுகழுதையும் சிவிகையும் கொல்லாப்பண்டி முதலியனவும் இருந்தனவென்பதும், இத்தன்மைக்குரிய பிறநாகரிகங்களும் இருந்தன என்பதும் பெறப்படும்."—செல்வகேசவராய முதலியார்.

7. சிறு சிறுவாக்கியங்கள் ஒன்றுசேர்ந்து ஒரு முற்று வாக்கியமாகும்போதும்.—

(உ-ம்.) "பாலையில் வதிவார் மறவர், அவர்செய்தி ஆறலைத்தல் முதலியன."—செ. கே. மு.

8. எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையே பிற தொடர்மொழிகள் வரும்போதும்.—

(உ-ம்.) "அம்மதில், வஞ்சனைபலவும் வாய்த்து, தோட்டி முள் முதலியன பதித்த காவற்காடும் அதனுள்ளே இடங்கர் முதலியன உள்ளுடைத்தாகிய கிடங்கும் புறஞ்சூழ்ந்து,..... இயற்றப்பட்டதாம்."—செ. கே. மு.

"இந்நூல், முதலிற் குறித்த எட்டுத்தொகையுள் ஒன்று."—தாமோதரம்பிள்ளை.

9. இரண்டிரண்டாகப் பதங்கள் சேர்ந்து வரும்போதும்.—

(உ-ம்.) ஆண்மையும்வீரமும், அறிவும்அடக்கமும், நிறையும் பொறையும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற வள்ளல்.

; செமிக்கோலன், அரைப்புள்ளி, இருமாத்திரை நிறுத்தம்.—

தம்மிற்றாமே முற்றுப்பெற்ற வாக்கியங்கள் சேர்த்து எழுதப்படும்போதும், மாத்திரை நிறுத்தத்திலும் அதிக அளவையுள்ள நிறுத்தம் அவசியமானபோதும்.—

(உ-ம்.) "இருட்டகத்து விளக்குக்கொண்டு புக்கால் விளக்குவாராத முன்னும் இருள்நீங்காது; வந்த பின்னும் இருள்நீங்காது; விளக்கு வருதலும் இருணீக்கமும் உடனே நிகழும்."—நக்கீரர்.

: கோலன், முக்காற்புள்ளி, மும்மாத்திரை நிறுத்தம்.—

1. ஒருவாக்கிய முடிந்தவுடன் முடிந்த வினையின் எச்சம் வரும்போதும்.—

(உ-ம்.) "அது கெடும் : கெட, அவனது ஆற்றாமைத் தன்மையைத் தன்கட்கொண்டு தலைமகனை ஆற்றுவிப்பதோர் சொற் சொல்லும்."—நக்கீரர்.

"அவனது ஆற்றாமை நீங்கும் : அது நீங்கத், தலைமகனது நிலைமை நோக்கி இவனிறந்துபடானென்பது உணர்ந்து இவை சொல்லும்."—நக்கீரர்.

2. முன் வாக்கியத்திற் கூறிய தொன்றையே விஸ்தரிக்குமுன்னும்.—

(உ-ம்.) "மற்றவை (களவு முதலிய) நல்லவாமாறுமுண்டு : என்னை ? ஒரு பெண்டாட்டி தமரொடுகலாய்த்து நஞ்சுண்டு சாவலென்னும் உள்ளத்தளாய் நஞ்சுகூட்டிவைத்து, விலக்குவாரில்லாத போழ்துண்பலென்று நின்றவிடத்து, அருளுடையானொருவன் அதனைக்கண்டு இவளிதனையுண்டு சாவாமைக் கொண்டு போயுகுப்பலென்று அவளைக் காணமே கொண்டு போயுகுத்திட்டான் ; அவளும் சனநீக்கத்துக்கண் நஞ்சுண்டு சாவான் சென்றாள் அது காணாளாய்ச் சாக்காடு நீங்கினாள். அவன் அக்களவினான் அவளை உய்யக் கொண்டமையான் நல்லூழிற் செல்லுமென்பது. மற்றும் இதுபோல்வன களவாகா, நன்மை பயக்குமென்பது."—நக்கீரர்.

3. ஒன்றைக் கூறிமுடித்துப் பின்னும் அதற்குச் சம்பந்தமானவொன்றை அடுத்துக் கூறும்போதும்.—

(உ-ம்.) "அவை (தமிழ், திசை, வடசொற்கள்) தம்முள் விரவநின்றவிடத்துத் தோன்றும் ஆற்றலும் ஓசையின்பமும் மிகச் சிறந்தனவேயாம் : பாகமும் செவ்விதாக விருக்கும்."—சே. கே. முதலியார்.

. புள்ஸ்டாப், முழுப்புள்ளி, நான்மாத்திரை நிறுத்தம்.—

1. ஒவ்வோர் வாக்கிய முடிவிலும்.—

(உ-ம்.) "பல்குமென்றஞ்சி இன்னபெயர் இன்னபாற்குரித்தெனக் கிளந்தோதாராயினார்."—சேனாவரையர்.

2. விலாச வெழுத்துக்களுக்குப் பின்னும்.—

(உ-ம்.) ந. த. கனகசுந்தரம்பிள்ளை. சி. வை. தாமோதரம்பிள்ளை.

3. சுருக்கப்பெயர்களை யடுத்தும்.—

(உ-ம்.) ஸ்ரீ கஸ்தூர் சிற். கைலாசபிள்ளை.

? வினாக்குறிப்பு. (நான்மாத்திரையளவு.)

(உ-ம்.) "மருஉவிற்கு ஒரு வழிப்பட்ட விதியுண்டா? திரவிடந் தமிழென மரீஇயிற்றென்றாற்போதாதா?"—தாமோதரம் பிள்ளை.

அது யாது? அஃதென்?

! வியப்புக்குறி. (நான்மாத்திரையளவு.)

1. வியப்பு எழக்கூறும் ஒவ்வோர்வாக்கியத்தையும் சொல்லையு மடுத்தும்.—

(உ-ம்.) மின்சாரக் கருவிகளும் யந்திரங்களுமில்லா வக்காலத்தில் இத்துணைப் பெருங்கோவில்கள் கோபுரங்களை நிர்மாணித்த நம்முன்னோர் பெருமையென்ன !

"காளமேகமே நீ மெதுநாளை மேகம்போல் பொய்த்தனையே! சிறப்புத்தானுனக்கு."

2. கழிவிரக்கம் காணக்கூறும் ஐயோ, அந்தோ, அசசோ, முதலிய சொற்களை யடுத்தும்.—

(உ-ம்.) "அவர்கள் (முகம்மதியர்) கோறானுக்கு மாறாகவும் வீறவதோ கிரந்தங்கள் மண்மேல் என்று மதவைராக்கியங் கொண்டு, அந்தோ! நமது நூற்சாலைகள் அனைத்தும் நீறாக அக்கினி பகவானுக்குத் தத்தஞ் செய்தனர்."—சி. வை. தாமோதரம்பிள்ளை.

3. ஒரோ வேளைகளில் விளிச்சொற்களை யடுத்தும்.—

(உ-ம்.) வஞ்சக! என் இவ்வாறு வஞ்சமியற்றினை?

வாசக நடைத்தன்மை.

(*Literary Diction in Prose.*)

பூர்வத்திலில்லனவாய் இடைநாட்களிலுண்டாய தமிழ்நூல்கள் பலவற்றினும் தமிழ்ச்சொற்களல்லாத பிறபாஷைச் சொற்களும் இங்குமங்குமாய் விரவிக்கிடத்தல் வெளிப்படை. இவ்வாறு விரவிய வற்றுள் பெரும்பாலானவை வடமொழிப்பதங்களே. பாதகண்டத்தின் வடதிசைநின்றும் தென்றிசைபோந்த ஆரியரோடு நம்முன்னோர் பயின்ற கூட்டுறவின் பயனாய் அவ்வாரிய பாஷைச் சொற்களும் அமிழ்தினுமினிய தமிழ் மொழியோடு கலந்து வழங்கப் பெறும் சிலாக்கியம் பெற்றன.

இவ்வாறு விரவிய ஆரியமொழிகளின் இயல்புநோக்கி யவற்றை தற்சமம் தற்பவமென இருபிரிவாய்ப் பிரித்துளார்.

தற்சமம்.—வடமொழி, தமிழ் ஆகிய இரண்டிற்கும் பொதுவாகிய எழுத்துக்களான் அமைவது.

(உ-ம்.) அமலம், கமலம்.

தற்பவம்.—ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்தாலும், அன்றி பொது, சிறப்பு ஆகிய இருவெழுத்துக்களாலும் அமைவது.

(உ-ம்.) சுகி. போகி.
அரி. ஜயம்.

வடமொழியன்றி மற்றும் பல பாஷைகளினின்றும் தமிழில் வழங்கும் பதங்களும் பலவுள. அவற்றைத் திசைச்சொல்லென்பர்.

(உ-ம்.) தள்ளை, அச்சன் முதலியன.

எனவே தமிழ்பாஷையானது, வடமொழி, திசைச்சொற்களாலும், இயற்சொல்லும் திரிசொல்லுமாகிய தமிழ் மொழிகளாலும் நடைபெறும்.

அன்றியும் நம்முன்னோர் காலத்தன்றி நமது காலத்தில் புதிதாகத் தமிழில் வழங்கும் பிறபாஷைச்சொற்களும் உள. அவை வருமாறு:—

சன்னல், பாதிரி... ...போர்த்துக்கேசியம்.
ஜபீன், மேஜை ... ...பாரசீகம்.
கஜனு, ஜப்தி ... ...அரேபியம்.
அல்வா, ஜமுக்காளம் ...இந்துஸ்தானி.

இவை நிற்க, தற்கால ராஜபாஷையாகிய ஆங்கிலம் நின்றும் பல்பல மொழிகள் தமிழில் வந்துலவுவவாயின. இம்மொழிகளைத் தள்ளுவதோ கொள்ளுவதோவெனும் ஐயுறவும் பலருக்குள் நிகழ்வதாயது. இச்சந்தேகம் காரணமின்றியே நிகழ்வதா? என்ன, நம்முன்னோர், அவசியமானவிடத்து பிறபாஷைச் சொற்களைத் தமிழுடன் சேர்த்தற்குத் தாமதித்தாரில்லை. அங்ஙனமாகவும் அவரின் பின்போந்தாராய நாம் அவற்றைச் சேர்த்தற்கு ஆலோசிபபதென்ன? மேலும், பிறபாஷைச் சொற்களைத் தம்முடன் சேராது சுத்தமாகவிருக்கும் பாஷையும் உலகில் நாகரீகமுள்ள எத்தேசத்திலும் வழங்குகின்றதோ? அன்று. இத்தன்மை, பாஷாதத்துவமுணர்ந்தோர்க்குத் தெள்ளிதின் வெளியாம்.

ஆதலின், அவசியமானவிடத்து ஆங்கிலப்பதங்களையும் தமிழுடன் கலந்து அவற்றையும் திசைச்சொல்லென வழைக்க.

இங்ஙனம் கூறியமையின் ஆங்கிலமும் கலந்து கேட்பதற்கு செவி நாணுமாறு பேசவேண்டுவதின்று. இடையிடை யவசியமிருப்பின் வழங்கலாம்.

சார் (Sir) நான் நேற்று மார்ணிங்கிலே (Morning) ரிவருக்குப் (River) போயிருந்தேன். அப்போது வாட்டர் (Water) பைவ் பீற் (Five feet) ஓடிக்கிட்டிருந்தது.

இவ்வாறு ஆபாசமாகப் பேசுதல் ஒண்ணாது. இவ்வாறு பேசிப் பழக்கப்பட்டவர் இதனை நீக்கப் பிரயாசப்படுவாராக.

ஒரு கருத்தை விளக்குதற்குரிய பதம் தமிழிலின்றேல் அதற்கென வோர் புதுமொழி காணல் சாலவும் நன்று. அதற்கும் வகையின்றேல் பிறபாஷைநின்று மெடுக்க.

தமிழ்மொழிகள் இயற்சொல், திரிசொல்லென இருபிரிவாம்.

எல்லோருக்கும் பொருள் விளங்கக் கூடியன இயற்சொல்.

(உ-ம்.) கல், மண்.

கற்றோரேயன்றி மற்றோர் பொருள் அறியக்கூடாதன திரிசொல்.

(உ-ம்.) கடி, தத்தை, கிள்ளை.

சொற்கள் பயிலுமாறு.—

1. பதங்கள் ஆதியிலுண்டான பிரகாரமே யாதும் வேற்றுமையின்றி வழங்கும். இதனை 'இலக்கணமுடையது' என்பர்.

(உ-ம்.) மரம், செடி.

2. பதங்கள் ஆதியிலுண்டானவற்றின் முன்பின்னாக மாறி வழங்கும். இதனை 'இலக்கணப்போலி' என்பர்.

(உ-ம்.) தசை : சதை.

3. பதங்கள் முற்றிலும் பேதமடைந்து சிதைந்தும் மருவியும் வழங்கும். இதனை 'மரூஉ' வென்பர்.

(உ-ம்.) அறவடித்த முன்சோறு : அறப்படிச்ச முந்நூறு.

இம்மூன்றும் இயல்பு வழக்காம்.

இடக்கரானவற்றை மறைத்து வழங்குதல். இதனை 'இடக்கரடக்கல்' என்பர். (உ-ம்.) பவ்வீ.

மங்கலமல்லவற்றை மங்கலமாக வழங்குதல். இதனை 'மங்கலம்' என்பர்.

(உ-ம்.) தாலி பெருகிற்று.

ஒரு கூட்டத்தார் ஏதேனும் ஒன்றைப் பிறரறியாப்படி தமக்குள் ஒருவாறு வழங்குதலும் உண்டு. இதனைக் 'குழூஉக்குறி' யென்பர்.

(உ-ம்.) கௌவி.—[எண்ணெய் விற்போர் புண்ணாக்குக்கு வழங்குவர்.]

இம்மூன்றும் தகுதிவழக்காம்.

வார்த்தைகள் இடையில் தொக்கி வருதலுமுண்டு. அவற்றைத் தொகையென்பர். அவை வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை, அன்மொழி என ஆறு பிரிவாம்.

1. **வேற்றுமைத்தொகை.** ஐ, ஆல், கு, இன், அது, கண் எனும் ஆறு வேற்றுமை யுருபுகளும் பதங்கட்கிடையே தொக்கி நிற்பது வேற்றுமைத்தொகையாம்.

(உ-ம்.) மரம் வெட்டினன். இங்கே ஐ எனும் இரண்டாம் வேற்றுமை யுருபு தொக்கிநின்றது. எனவே இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். இவ்வாறே மற்ற வேற்றுமைத்தொகை களும்.

2. **வினைத்தொகை.** காலத்தைக் காட்டுகின்ற இடைநிலைகள் தொக்கி நின்ற பெயரெச்சமே வினைத்தொகையாம்.

(உ-ம்.) சுடுசோறு : சுட்டசோறு, சுடுகின்றசோறு, சுடும்சோறு என இடைநிலை சேர்ந்த காலை இது பெயரெச்சமாதல் காண்க.

3. **பண்புத்தொகை.** பண்பை விளக்குவதற்குரிய ஆகிய வெனும் சொல் தொக்கிநிற்பது பண்புத்தொகையாம்.

(உ-ம்.) செம்மண்—செம்மையாகிய மண் என விரியும்.

4. **உவமைத்தொகை.** உவமையை விளக்கும் போல முதலிய உருபுகள் தொக்கிநிற்பது உவமைத்தொகையாம்.

(உ-ம்.) தூண்தோள், தூண்போன்ற தோள் என விரியும்.

5. **உம்மைத்தொகை.** 'உம்' எனும் சொல் அளவைப்பொருட் களுக்கிடையில் தொக்கிநிற்பதே உம்மைத்தொகையாம்.

(உ-ம்.) நகுலசகதேவர்—நகுலனும் சகதேவனும்.

6. **அன்மொழித்தொகை.** மேற்கூறிய ஐந்து தொகையினும் அவற்றிலில்லாத பிறமொழிகளும் தொக்குநிற்பின் அன்மொழித் தொகையாம்.

(உ-ம்.) தூண்தோள் வந்தான்.—இது தூண்போன்ற தோளையுடைய மனிதன் வந்தான் என அங்கில்லாத மனிதன் எனும் மொழி யும் தொக்கியது. [இது உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.]

ஒன்றுக்குரிய பெயரினல் அதற்குச் சம்பந்தமான பிறிதோர் பொருளை யழைப்பதுமுண்டு. அது ஆகுபெயராகும். (இதன் விவ ரத்தையும் உதாரணங்களையும் பெயரியலில் ஆகுபெயரின் கீழ்க் காண்க.)

தமிழில் வாக்கியங்கள் வழங்கும்போது அவற்றிலுள்ள எழுவாய், பயனிலை முதலியவை திணை, பால், இடம், காலம் முதலியவற்றில் பொருத்தமுடையனவா யிருக்கவேண்டும்.

(உ-ம்.) அவன் நேற்று விளையாடினன்.

இவ்வாக்கியத்தில்,

'அவன்' எனும் எழுவாய்—

உயர்திணை—அதன் பயனிலையாகிய 'விளையாடினன்' என்பதும் உயர்திணை.

ஆண்பால்— அதன் பயனிலையாகிய 'விளையாடினன்' என்பதும் ஆண்பால்.

படர்க்கை—அதன் பயனிலையாகிய 'விளையாடினன்' என்பதும் படர்க்கை.

'நேற்று' என்பது இறந்தகாலம் எனவே வினைமுற்றும் இறந்தகாலம். இவ்வாறு பொருத்தமின்றி வருமேல் வழு வெனப்படும்.

(உ-ம்.)	அவன் படித்தது	திணைவழு.
	அவள் படித்தான்	பால்வழு.
	நீ படிப்பேன்	இடவழு.
	நேற்று வருவேன்	காலவழு.

திணை, பால் முதலியவை வழுவாயிருப்பினும் அவற்றை மேலோர் சரியென ஒப்புமிடங்களுமுள. அவற்றை வழுவமைதி யென்பர். அவை வருமாறு:—

திணைவழுவமைதி.—1. பொருள் முதலாறும் உயர்திணையோடு சேர்ந்து முடிக்கப்படும்பொழுது உயர்திணைப் பயனிலையே தமக்கும் பயனிலையாகக் கொள்ளும்.

(உ-ம்.)	நம்பி பொன் பெரியன்.	[பொருள்.]
	நம்பி நாடு பெரியன்.	[இடம்.]
	நம்பி வாணாள் பெரியன்.	[காலம்.]
	நம்பி மூக்குக் கூரியன்.	[சினை.]
	நம்பி குடிமை நல்லன்.	[குணம்.]
	நம்பி நடை கடியன்.	[தொழில்.]

இங்கு உயர்திணை எழுவாயே அஃறிணையும் கொண்டது.

2. இருதிணைக்கு முரிய சொற்கள் கலந்து வரும்போது சிறப்பு, மிகுதி, இழிவு நோக்கி உயர்திணை அல்லது அஃறிணை வினையையே ஏற்கும்.

(உதாரணம்.)

'திங்களுஞ் சான்றோரு மொப்பர்.' —[சிறப்பு.]

'பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்
மூத்தார் குழவி யெனுமிவர்கட்
காத்த வழிவிலங்கி ஞரே பிறப்பிடைப்
போற்றி யெனப்படு வார்.' —[திணைவிரவி மிகுதியான் உயர்திணைமுடிபேற்றன.]

'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா.'—[இழிவினால் அஃறிணை வினை ஏற்றன.]

3. உவப்பு, உயர்வு, சிறப்பு, கோபம், இழிப்பு இவை காரணமாக ஓர் திணைச்சொல் மற்றோர் திணையாக வழுவினும் இயல்பாம்.

(உதாரணம்.)

ஆவினை 'எம் அம்மை வந்தாள்' எனக்கூறல் உவப்பினால் அஃறிணை உயர்திணையாயது.

'செந்தார்ப் பசுங்கிளியார் சென்றார்க்கு.'—உயர்வு: அஃறிணை உயர்திணையாயது.

'தம்பொரு ளென்ப தம்மக்கள்.' —சிறப்பு: உயர்திணை அஃறிணையாயது.

'எவ்வுஞ் செய்கலான் றான்றேரா னவ் வுயிர்
போஒ மளவுமோர் நோய்.' —கோபம்: உயர்திணை அஃறிணையாயது.

'நாமானுடைமை.' —இழிப்பு: உயர்திணை அஃறிணையாயது.

பால்.—1. பல பால்களுக்குமுரிய சொற்கள் சேர்ந்து வரும்போது சிறப்பு, மிகுதி, இழிவு காரணமாக ஒருபாலுக்குரிய முடிப்பு பெறும்.

(உதாரணம்.)

'தானுந் தன்றையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்' —[சிறப்பு. ஆண்பாலும் பெண்பாலும் விரவி ஆண்பால் வினையேற்றது.]

தோழனும் தானும் வந்தான் ; தோழியும் தானும் வந்தாள் முதலியன வும் கொள்க.

2. ஒரோவிடங்களில் ஒருமைக்குப் பன்மையும் பன்மைக்கு ஒருமையும் வழங்கும்.

(உ-ம்.) வெயிலெல்லாம் மறைத்தது மேகம். —ஒருமையிற் பன்மை.
இருகண்ணும் சிவந்தது. —பன்மையில் ஒருமை.

3. உவப்பு, உயர்வு, சிறப்பு, கோபம், இழிப்பு காரணமாக ஒருபால் மற்றொரு பாலாக வழுவிவரினும் இயல்பாம்.

(உதாரணம்.)

புதல்வனை 'என் அம்மை வந்தாள்' என்பது —உவப்பு. [ஆண்பால் பெண்பாலாயிற்று.]

ஒருவனை 'அவர் வந்தார்' என்பது —உயர்வு. [ஆண்பால் பலர்பாலாயது.]

'தாதாய் மூவேழுலகுந் தாயே' —சிறப்பு. [ஆண்பால் பெண்பாலாயிற்று.]

'எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்' —கோபம். [பலர்பால் ஆண்பாலாயது.]

பெண்வழிச்செல்வானை 'இவன்பெண்' என்பது—இழிவு. [ஆண்பால் பெண்பாலாயது.]

காலம்.—1. முக்காலத்திலும் ஒன்றுபோல் மாறாதிருப்பவற்றை நிகழ்காலத்தி லுரைப்பர்.

(உ-ம்.) மலை நிற்கின்றது ; கடல் அலை மோதுகிறது.

2. விரைவு, மிகுதி, தெளிவு, இயல்பு இவை காரணமாக ஒரோ வேளைகளில் காலமாறி வருதலுமுண்டு.

(உதாரணம்.)

'சோறு வேவாதிருப்ப உண்டுபோதற் கிருப்பவ னொருவனை விரைவில் அழைத்துச்செல்லப் போந்தா னொருவன் உண்டிலையோ வென, உண்டேன் உண்டேன் எனப்பதிலுரைக்கும். மற்று அவன் உண்டிருக்கும்போது கேட்க வும், உண்டேன் உண்டேன் எனப் பதிலுரைக்கும்.' — [விரைவின் எதிர், நிகழ் இறப்பாயின.]

அக்காட்டிற்புகின் கூறை பறிகொள்ளப்பட்டான். [விகுதியால் எதிர் இறப்பாயது.]

அறஞ்செயிற் சுவர்க்கம் புகுந்தான். [தெளிவு: எதிர் இறப்பாயது.]

பண்டு விளையாடுவதிக்கா, விளையாடுகிறதிக்கா. [இயல்பு: இறப்பு எதிரும் நிகழ்வுமாயது.]

இடம். ஒரோவிடங்களில் ஓரிடம் பிறவிடம் தழுவலுமுண்டு.

(உதாரணம்.)

"சாத்தன்றாய் இவை செய்வளோ?" [தன்மைக்கண் படர்க்கை.]

'எம்பியை யீங்குப்பெற்றேன்.' [முன்னிலைக்கண் படர்க்கை.]

நீயோ அவனோ யாரிது செய்தார்? யானோ அவனோ யாரிது செய்தார்? நீயோ யானோ யாரிது செய்தார்? நீயோ யானோ அவனோ யாரிது செய்தார்? [ஓரிடக் கண் பிறவிடம் வந்தது.]

வாக்கியங்களில் வினா, விடை, மாபு முதலியனவும் வழுவாது வருதல் அவசியம்.

மாபு, ஒருபொருளை எச்சொல்லினால் எவ்வாறு முன்னோர் வழங்கினரோ அப்பொருளை அச்சொல்லினால் அவ்வாறு வழங்குதல் மாபாம்.

(உதாரணம்.)

கறக்கிற எருமை பாலோ சினையோ? —வினாவழு.
கடம்பூர்க்கு வழியாது? இடம்பூணி என்னாவின் கன்றன்று (இடம்பூணி இடப்புறம் கட்டியது.) —விடைவழு.
யானைச் சாணி, எருமை யிலத்தி. —மாபுவழு.

ஒரோவிடங்களில் வினா, விடை, மாபு முதலியவற்றில் வழு நிகழ்ந்தகாலையும் சரியென ஒப்புவர். அவை வருமாறு:—

வினாவில், திணை, பால், இடங்களில் ஐயம் நிகழ்ந்த காலையில் பொதுச்சொல்லாற் கூறும்.

(உதாரணம்.)

குற்றியோ மகனோ அவண் தோன்றுகின்ற உரு? —உருவென்பது பொதுச்சொல். அன்றி உருவுக்குப்பதில் அது, அல்லது அவனெனக்கேட்பின் வழுவாம்.

ஆண்மகனோ பெண்மகளோ அங்கு நின்றவர்.—நின்றவர் என்பது பொது. நின்றவன், நின்றவள் எனின் வழுவாம்.

ஒன்றோ பலவோ இச்செய்புக்க பெற்றம்.— பெற்றம் பொதுவாம். புக்கது, புக்கன வெனின் வழு.

விடையில் திணை, பால், இடங்களில் ஐயம் நிகழ்ந்தக்கால் தெளிவாகவிருந்த பொருள்மேல் அல்லாத தன்மையை வைத்துங் கூறுவர்.

(உதாரணம்.)

குற்றியோ மகனோ? [குற்றியெனின் மகனன்று. மகனெனின் குற்றியல்லன்.]

ஆண்மகனோ பெண்மகளோ? [பெண்ணெனின் ஆண்மகனல்லள். ஆணெனின் பெண்மகளல்லன்.]

மரபு. வெவ்வேறு வினைகளை ஏற்கக்கூடிய பல சொற்களைக் குறிக்க வழங்கும் ஒரு பொதுச்சொல்லும், வெவ்வேறு வினைகளை ஏற்கக்கூடிய பல சொற்களும சேரவரும சொற்களும், இவற்றில் ஏதேனும் ஒன்றற்குரிய சிறப்புவினையை ஏற்காமல் எல்லாவற்றிற்கும பொதுவான ஓர் வினையை ஏற்கும்.

(உதாரணம்.)

அணி என்பது கவிப்பன, கட்டுவன, இடுவன, தொடுவன முதலிய பல சொற்களையும் குறிக்க வழங்கும் ஒரு பொதுச்சொல் ஆதலின், இவற்றின் சிறப்பாகாத பொதுவான அணிந்தார், தாங்கினர் எனும் வினையைக் கொண்டு முடிக்க.

அவன் சிலநாள் சோறும், சிலநாள் நீரும், சிலநாள் சருகும் அயின்றான் என்க. ஏனெனில், சோறு உண்டான், நீர் பருகினன், சருகு தின்றான் ஆதலின். உண்டான் முதலிய சிறப்புச் சொல்லாற் கூறுதல் வழுவாம்.

வாக்கியங்களிலுள்ள பதங்கள் பலவும் தாமாகவே வெளிப்படையாகப் பொருள் பயக்கும். எனினும், சிலசொற்கள் முன் பின் சொற்களின் குறிப்பினால் மாத்திரம் பொருள்தரும். அவை வருமாறு:—

(உதாரணம்.)

1. ஆயிரமக்கள் பொருதார்.—ஒன்றொழி பொதுச்சொல். [போர் ஆண்களுக்குரிமையான் மக்கள் ஆண்களை விளக்கும்.]

2. மரைமலர். —விகாரம். [மலர் எனும் குறிப்பினால் மரை முதல் குறைந்த தாமரையாம்.]

3. சொல்லவல்லன். —வினைக்குறிப்பு. [பெயர்ப் பொருளை ஒழித்து வினைக்குறிப்புப் பொருள் தந்தது.]

4. ' ஆத்திச்சூடி படித்தான் —முதற்குறிப்பு.

5. ஐவருக்கும் பெண் அழியாத பத்தினி —தொகைக்குறிப்பு. [ஐவர் பாண்டவர்.]

6, 7, 8. அன்மொழி, ஆகுபெயர், தகுதிவழக்கு இவைகளை இவ்வத்தியாயத்தில் பிறவிடங்களிற் கண்டுகொள்க.

1. ஒரு வாக்கியத்தினிடையில் ஓர் சொல்லை இரண்டு மூன்று முறை அடுக்கிச்சொலலில் தவறாம். எனினும், விரைவு, அச்சம் முதலிய பொருள் பயக்குமாறு அடுக்கிச்சொல்லின் வழுக்கா.

(உ-ம்.) தீத்தீத்தீ. பாம்பு பாம்பு. எடு எடு.

2. ஒரு பொருளையே குறிக்கும் இரண்டு சொற்களை அடுத்துச் சொல்லுதல் தவறெனினும், ஓர் தன்மையை அதிகப்படுத்திக் கூறுமிடத்தில் வழங்கின் இழுக்கன்று.

(உ-ம்.) குழிந்தாழ்ந்த கண்ணினன். [மிகவும் ஆழ்ந்தகண்.]

3. திட்டமாய் இத்தனை என்றறிந்தவற்றைக் கூறுமிடத்து 'உம்' சேர்த்துச் சொல்ப. (உ-ம்.) இருகாலும் ஒடிந்தது.

4. ஒன்றுக்கொன்று சம்பந்தமான பலபொருட்களைக் கூறும்போது ஒன்றைமாத்திரம் கூறி மற்றவற்றையும் அதனுள்ளடக்கமாகக் கொள்வதுண்டு.

(உதாரணம்.)

சோற்றை யுண்டான் எனுமிடத்து, கறியையும் தின்றான் என்பது பெறப்பட்டது.

வெற்றிலை தின்றான் எனுமிடத்து, பாக்கு தின்றான், சுண்ணாம்பு தின்றான் என்பன பெறப்பட்டன.

5. உயர்திணை உம்மைத்தொகையாயின் பலர்பாலீற்றனவாம்.

(உ-ம்.) இராமலக்ஷ்மணர்.

6. ஒரு பொருள்மேல் பலபெயர்வர முடிவில் ஒருவினையேனும் தனித்தனியே ஒருமை வினையேனும் கொடுத்துக் கூறுவர்.

(உதாரணம்.)

'ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன் வந்தான்.'
'பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியிவன்.' } முடிவில் ஒரு வினை.

'வேயோன் புகுதக, இயக்கன் புகுதக, வென்றோன் புகுதக.' எனப் பெயர்தொறும் வினைவந்தது.

7. ஒரோவிடங்களில் செயப்படு பொருளைக் கருத்தாபோலவைத்துக் கூறுதலுமுண்டு.

(உ-ம்.) இவ்வாடையான் வாங்கினது.

8. அஃறிணைச் சொற்களை உயர்திணையாகப் பாவித்துக் கூறலுமுண்டு.

(உ-ம்.) முகம் நாணத்தை உரைக்கும்.
சந்திரா! என் வானிடை யோடுகின்றாய்?

9. ஈ, தா, கொடு, இம்மூன்றும் முறையே இழிந்தோன், ஒப்போன், பெரியோன் இரக்கும் சொற்களாம்.

(உ-ம்.) யாசகன் தனவானை ஈயுமாறும்
தனவான் தனவானைத் தருமாறும்
தனவான் யாசகனைக் கொடுக்குமாறும்* } கேட்பர்.

10. செய்யுளுக்குரிய மோனை முதலிய அழகுகளும் வாசகத்திலமையப்பெறின் அழகுபயப்பதுண்டு.

(உதாரணம்.)

தாம் கனிவுடன் கைப்பிடித்த கற்பினுக்கரசியராம் காதன்மனையார் கையிற் காசிலராய்க் கரைந்துருகித் தம் கான்முளைகள் கூம்பசியாற் களைத்திருக்க அதனைச் சிந்தையிலோராது அன்பின்றி யறனின்றி யருளின்றித் தம் அகத்துளபண்டம் அற்பவிலைக்கு விற்றேனும் மது வருந்திக் களித்திருக்கச் செல்வர். [இதிற்பலவிடத்தும் ககரமும் அகர

11. வாசகநடை எல்லாவிடங்களினும் ஒன்றுபோ லிருத்தல் வேண்டும். ஓரிடத்தில் உயர்ந்த நடையும் அதனையடுத்து சாதாரண நடையும் பிரயோகித்தல் தவறாம்.

12. வாக்கியங்கள் ஓசை, அமைவு, அளவு முதலியவற்றில் ஒன்றையொன்று ஒத்திருத்தல் நன்று.

(உதாரணம்.)

அறிவும் அடக்கமும் அடர்ந்த அண்ணல். ஆண்மையும் வீரமும் ஆற்றலுமுடையான். பொறையும் நிறையும் பொருந்திய பெருமையன். காமம் குரோதம் கனவிலும் கருதான்.

களங்கமற்ற நெஞ்சினன். நின்மல சிந்தையன். ஈகையாளன், இரக்கமிக்குடையான். வாய்மையாளன், வல்லுரை கூறாதான். நடுநிலை தவறான, நச்சினார்க்கினியன். உண்மைநெறி தவறான், உயிர்க்கொலை நீக்குவான்.

யாப்பதிகாரம். (*Prosody.*)

உறுப்பியல்.

பல சொற்களைச் சேர்த்துப் பொருள் அமையுமாறு அழகு பெறக் கட்டிவைத்தல் செய்யுளெனப்படும். செய்யுளைப் பற்றிக் கூறுவது யாப்பு. இதற்குரிய உறுப்புகள் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடையென ஆறும்.

எழுத்து. எழுத்தியலிற் கூறப்பட்டுள்ள முதல், சார்பு எனும் இருவகை யெழுத்துக்களுமே. அவற்றுள் பெரும்பாலும் ஆய்தமும் ஒற்றும் யாப்பில் எழுத்துக்களென மதிக்கப்பெறா. ஆனால் அவை அளபெடுத்து ஒரு மாத்திரை யளவாய் ஒலிக்கும்போது ஓரெழுத்தாய் எண்ணப்படும்.

அசை. எழுத்துக்கள் தனித்தும், ஈரெழுத்துக்கள் சேர்ந்தும், ஒற்றடுத்தும் வரும்போது அசையெனப்படும். அசைகள் நேரசை, நிரையசை யென இருபிரிவின.

நேரசை.—குறிலேனும், நெடிலேனும், தனித்தேனும், ஒற்றடுத்தேனும் வரின் நேரசையாம்.

(உ-ம்.) து, துன், தூ, தூண்,— இந்நான்கும் நேரசை.

நொ, து வென ஏவலாகவேனும், தம்மையே சுட்டுவதாக வேனும் இருந்தாலன்றி தனிக்குறில் மொழிமுதலில் நேரசை யாகாது.

நிரையசை.—குறிலிணையேனும், குறில்நெடிலேனும், தாமாக வேனும், ஒற்றடுத்தேனும் வரின் நிரையசையாம்.

(உ-ம்.) புக, புகா, புகல், புகார்,—இந்நான்கும் நிரையசை.

சீர். மேற்கூறிய அசைகள் தனித்தும் இரண்டுமுதல் நாலளவாகச் சேர்ந்தும் வருவது சீராம்.

சீர்கள் ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என நாலு பிரிவினையுடைய. அவை முறையே தனிச்சீர் அல்லது பொதுச்சீர், இயற்சீர், உரிச்சீர், பொதுச்சீர் எனப் பெயர்பெறும்.

தனிச்சீர்.—நேரசையேனும் நிரையசையேனும் தனித்து நின்று வழங்குவதாம். இது பெரும்பாலும் வெண்பாவினீற்றடி ஈற்றுச்சொல்லாக வழங்கும். அப்பொழுது நேரசைக்கு வாய்ப்பாடு 'நாள்'; நிரையசைக்கு வாய்ப்பாடு 'மலர்.'

(செய்யுளைத் தளைபிரிக்க அல்லது அலகிடச் சுலபமாமாறு சீர்களைக்குறிக்கச் சொல்லிக்கொள்ளும் குறிகளே வாய்ப்பாடுகளாம்.)

(உதாரணம்.)

ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார்.

[இக்குறள் வெண்பாவின் ஈற்றில் நாள் எனும் வாய்ப்பாட்டிற்குரிய நேர் அசைச்சொல்லாம் 'யார்' வந்தமைகாண்க.]

அரியவென் றாகாத வில்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்.

[இக்குறள் வெண்பாவின் ஈற்றில் மலர் எனும் வாய்ப்பாட்டிற்குரிய நிரை அசைச்சொல்லாம் 'செயின்' வந்தமை காண்க.]

ஈரசைச்சீர் அல்லது இயற்சீர்.—நேரசை, நிரையசை யிரண்டும் தனித்தனி யிரட்டியும் இரண்டும் முன்பின்னாகச் சேர்ந்தும் வரும் நான்குமேயாம். அவை வருமாறு:—

(உதாரண வாய்ப்பாடு.)

(உ-ம்.)	நேர் நேர்	...	...	தேமா.
	நேர் நிரை	...	...	கூவிளம்.
	நிரை நிரை	...	...	கருவிளம்.
	நிரை நேர்	...	...	புளிமா.

இயற்சீர்கள் பெரும்பாலும் ஆசிரியப்பாவில் வழங்கும். சில விடங்களில் வெண்பாவில் வழங்குதலுமுண்டு.

(ஆசிரியப்பாவெனினும் அகவற்பாவெனினும் ஒக்கும்.)

(உதாரணம்.)

பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி
என்னு நாமத் திருந்தவத் தோனே.

இவ்வாசிரியப்பாவில்—

பொன்மதிற்	...நேர்நிரை.	என இயற்சீர்கள் நான்கும் வந்தமை காண்க.
முனியருள்	...நிரைநிரை.	
சனகைச்	...நிரைநேர்.	
என்னு	...நேர்நேர்.	

முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும்.

இக்குறள் வெண்பாவில்—

முன்னுற	...நேர்நிரை.	என இயற்சீர்கள் நான்கும் வந்தமை காண்க.
காவா	...நேர்நேர்.	
திழுக்கியான்	...நிரைநிரை.	
றிரங்கி	...நிரைநேர்.	

மூவசைச்சீர் அல்லது உரிச்சீர்.—மேற்கூறிய இயற்சீர் நான்கினோடும் ஈற்றில் நேரசையும் நிரையசையும் சேர உண்டாகும் எட்டும் உரிச்சீர் எனப்படும்.

(உதாரணம்.)

நேர் நேர் நேர்	...தேமாங்காய்.	நேர் நேர் நிரை	...தேமாங்கனி.
நிரை நேர் நேர்	...புளிமாங்காய்.	நிரை நேர் நிரை	...புளிமாங்கனி.
நேர் நிரை நேர்	...கூவிளங்காய்.	நேர் நிரை நிரை	...கூவிளங்கனி.
நிரை நிரை நேர்	...கருவிளங்காய்.	நிரை நிரை நிரை	...கருவிளங்கனி.

இவற்றுள் காய்ச்சீர் நான்கும் வெண்பாவிற்கு உரிமையின் வெண்பாவுரிச்சீர் எனவும், கனிச்சீர் நான்கும் வஞ்சிப்பாவில் வழங்குதலின் வஞ்சியுரிச்சீர் எனவும் பெயர்பெறும்.

(உதாரணம்.)

'பானு நெடுந்தேர் படுகடலிற் பாய்ந்ததற்பின்
கான மடம்பிண் கவட்டிலைகள்—மானின்
குளம்பேய்க்கு நன்னுடன் கோதையொடுஞ் சென்றான்
இளம்பேய்க்குத் தோன்றா விருள்.'

இவ்வெண்பாவில்—

படுகடலிற்	...நிரை நிரை நேர்	எனக் காய்ச்சீர்கள் நான்கும் வந்தமை காண்க.
பாய்ந்ததற்பின்	...நேர் நிரை நேர்	
குளம்பெய்க்கும்	...நிரை நேர் நேர்	
நன்றுடன்	...நேர் நேர் நேர்	

நாலசைச்சீர் அல்லது பொதுச்சீர்.—மேற்கூறிய உரிச்சீர் எட்டினோடும் நேரசையும் நிரையசையும் சேர்வதனால் உண்டாகும் பதினாறும் நாலசைச்சீராம். இவற்றின் உதாரண வாய்பாடு தண்ணிழல், தண்பூ, நறும்பூ, நறுநிழல் என முடியும். இவை வெண்பா தவிர்ந்த மற்றைய பாக்களில் அருகியும் பெருகியும் வரும்.

[பரீக்ஷைக்குப் படிக்கும் மாணவர்க்கு இது அவசியமின்றாதலின் விடப்பட்டது.]

தளை. மேற்கூறிய சீர்கள் ஒன்றோடொன்று சேர்ந்து வருதல் தளையெனப்படும். அவை நேரொடு நேரும், நேரொடு நிரையும், நிரையொடு நிரையும், நிரையொடு நேரும் சேர்ந்து வரும். இவற்றுள் நேரொடு நேரும், நிரையொடு நிரையும் சேரின் ஒன்றி வருதலென்றும் நேரொடு நிரையும், நிரையொடு நேரும் சேரின் ஒன்றாது வருதலென்றும் கூறுவர். செய்யுட்களில் சீர்கள் ஒன்றோடொன்று சேரும் இயல்பு நோக்கி அவற்றை ஏழு பிரிவாகப் பிரித்துளார். அவை முறையே நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றா வஞ்சித்தளை, கலித்தளை யெனப் பெயர்பெறும்.

அவை வருமாறு :—

1. நேரொன்றாசிரியத்தளை யாவது, இயற்சீரில் நின்றசீரின் ஈற்று நேரசை வருஞ்சீரின் முதல் நேரசையோடொன்றி வருதல். அதாவது மாமுன் நேர் வருவது.

(உ-ம்.) ‘பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள்.’

இவ்வாசிரியப்பா அடியில் ‘சனகைச்’ எனும் சீரின் ஈற்று நேரசை ‘கைச்’ என்பது ‘சன்மதி’ என்பதின் ‘சன்’ என்னும் நேரசையோடு ஒன்றியது. இதில் ‘சனகைச்’—நிரைநேர்; தேமா; ‘சன்மதி,’—நேர் நிரை; எனவே மாமுன் நேர் வந்தது.

2. நிரையொன் றாசிரியத்தளையாவது, இயற்சீரில் நின்றசீரின் ஈற்று நிரையசை வருஞ்சீரின் முதல் நிரையசையோ டொன்றிவருதல். அதாவது விள முன் நிரைவருவது.

(உ-ம்.) மேற்கூறிய அடியில் 'பொன்மதிற்' எனும் சீரின் ஈற்று 'மதிற்' எனும் நிரையசை 'சனகை' என்பதில் 'சன' எனும் நிரையசையோடு ஒன்றியது.

அதாவது, 'பொன்மதிற்'—நேர்நிரை, கூவிளம்; 'சனகை'—நிரைநேர் எனவே விளமுன் நிரை வந்தது.

இவ்விரண்டும் அகவற்பாவில் வழங்கும்.*

3. இயற்சீர் வெண்டளையாவது, இயற்சீரில் நின்றசீரின் ஈற்று நேரசை ஒன்றாது வருதலும், ஈற்று நிரையசை ஒன்றாது வருதலுமாம். அதாவது மா முன் நிரையும், விள் முன் நேரும் வருவது.

(உ-ம்.) 'முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும்.'

இக்குறள் வெண்பாவில் 'முன்னுறக்' இச்சீரின் ஈற்று நிரை 'காவா' வென்பதன் நேரசையோடும், 'காவா' என்பதன் ஈற்று நேரசை 'திழுக்கியான்' என்பதின் நிரையசையோடும் ஒன்றாது வந்தன.

அதாவது, 'முன்னுறக்'— நேர்நிரை, கூவிளம்; 'காவா'—நேர் நேர், விளமுன் நேர் வந்தது. 'காவா'—நேர் நேர், தேமா; 'திழுக்கியான்'— நிரை நிரை, மாமுன் நிரை வந்தது.

4. வெண்சீர் வெண்டளையாவது, மூவசைச்சீரில் காயிறுதி பெற்ற வெண்பாவுரிச்சீர் ஒன்றிவருதலாம். அதாவது காய்முன் நேர் வருவது.

(உ-ம்.) 'வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.'

இக்குறள் வெண்பாவில் 'வியவற்க' எனும் சீரின் ஈற்று நேரசை 'வெஞ்ஞான்றுந்' என்பதன் நேரசையோடு ஒன்றியது.

அதாவது, 'வியவற்க'— நிரை நேர் நேர், புளிமாங்காய்; 'வெஞ்ஞான்றும்'—நேர் நேர் நேர் எனவே காய்முன் நேர் வந்தது.

இவ்விரண்டும் வெண்பாவில் வழங்கும்.

இயற்சீர் வெண்டளை ஆசிரியப்பாவில் வழங்குதலுமுண்டு.

(உ-ம்.) மேல் இயற்சீரின் கீழ் கொடுத்த உதாரண ஆசிரியப்பாவில் 'சிறப்பிற் பவணந்தி' என்பதில், 'சிறப்பில்'—நிரை நேர், புளிமா; 'பவணந்தி' என்பதில் நிரை முன் வந்தது.

5. கலித்தளையாவது, மேற்கூறிய வெண்பாவுரிச்சீர் ஒன்றாது வருதல். அதாவது, காய்முன் நிரை வருதல்.

6. ஒன்றிய வஞ்சித்தளையாவது, மூவசைச்சீரில் கனியிறுதி பெற்ற வஞ்சியுரிச்சீர் ஒன்றிவருதல். கனிமுன் நிரை வருவது.

7. ஒன்றா வஞ்சித்தளையாவது, மேற்கூறிய வஞ்சியுரிச்சீர் ஒன்றாது வருதலாம். கனிமுன் நேர் வருவது.

அடி. தளைகள் அடுத்துவருவது அடியாகும்.

அடிகளில் இருசீர்கள் முதல் எழு, பத்துச் சீர்கள் வரை அடுத்து வரும். அவ்வாறு அடுத்து வந்து,

இருசீரான் ஆவது குறளடி என்றும்,
முச்சீரான் ஆவது சிந்தடி என்றும்,
நாற்சீரான் ஆவது அளவடி அல்லது நேரடி என்றும்,
ஐஞ்சீரான் ஆவது நெடிலடி யென்றும்,
மேற்பட்டசீரான் ஆவது கழிநெடிலடி யென்றும் பெயர் பெறும்.

இவற்றுள், குறளடியும் சிந்தடியும் வஞ்சிப்பாவிலும், அளவடி வெண்பா, அகவற்பாவிலும் நடக்கும்.

பாவினங்களில் எல்லா அடிகளும் நடக்கும்.

மேற்கூறிய தளைகளும் அடிகளும் இவ்விப்பாக்களில் வருமெனக் கூறினரேனும் அவை தமக்குரியவையன்றிப் பிறபாக்களிலும் ஒரோவேளைகளில் வருவதுண்டு. வெள்ளையடிகள் ஆசிரியத்திலும், ஆசிரியவடிகள் வஞ்சியிலும், வஞ்சியடி ஆசிரியத்திலும், வெள்ளையடி கலியிலும் காணக்கிடக்கும்.

மேற்கூறிய அடிகள் அடுக்கிவருவதே செய்யுளாம்.

வெண்பாவிற்கு ஈரடிச் சிறுமையும், வஞ்சிக்கும் அகவற்கும் மூவடிச் சிறுமையும், கலிப்பாவுக்கு நாலடிச் சிறுமையும் உள்ளன.

(உதாரணம்.)

'பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.' [ஈரடிச் சிறுமை வெண்பா.]

'முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலைய னொள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே.' [மூவடிச் சிறுமை ஆசிரியப்பா.]

செய்யுட்களின் அடிகளின் பெருமைக் கெல்லை பாடுவோரது பொருள்முடிவுக் குறிப்பேயாகலின் வரையறையில்லை.

தொடை. செய்யுட்கள் கேட்போர்க்கு இனிமை பயக்கு மாறு பலவடிகளின் எழுத்துக்களும் ஓரடியின் பலசீர்களும் ஒன்று போல் ஒலித்து நிற்பதேயாம்.

இது, மோனைத்தொடை, எதுகைத்தொடை, முரண்தொடை, இயைபுத்தொடை, அளபெடைத்தொடை எனஐவகைப்படும்.

இவற்றுள் ஒவ்வொன்றும் இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என எழு பிரிவினையுடையது. அடிதொறும் வருவது அடி யெனப்படும்.

1. மோனைத்தொடை :—

அடிமோனை.—ஒரு செய்யுளின் பல வடிகளினுமுள்ள முத லெழுத்து ஒரே எழுத்தாய் வருதல்.

(உ-ம்.) 'மாவும் புள்ளும் வதுவையிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையும் கமழ
மாலை வந்த வாடை
மாயோ ளின்னுயிர்ப் புறத்திறுத் தற்றே.'

இணைமோனை.—ஓரடியின் முதலிருசீரின் முதலெழுத்துகள் ஒன்றுதல்.

(உ-ம்.) 'வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.'

பொழிப்புமோனை.—ஓரடியின் முதலாம், மூன்றாம் சீர் முத லெழுத்தொன்றுதல்.

(உ-ம்.) 'வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்த மென்றுணரற் பாற்று.'

ஒரூஉமோனை.—ஓரடியின் முதலாம், நான்காம் சீர் முதலெழுத் தொன்றுதல்.

(உ-ம்.) 'அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.'

கூழைமோனை.—ஓரடியின் முதல் மூன்று சீர்களின் முதலெழுத் தொன்றுதல்.

(உ-ம்.) 'தானம் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.'

மேற்கதுவாய்மோனை.—ஓரடியின் முதல், மூன்று, நான்கு சீர்களின் முதலெழுத் தொன்றுதல்.

(உ-ம்.) 'விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.'

கீழ்க்கதுவாய்மோனை.—ஓரடியின் முதல், இரண்டு, நான்கு சீர்களின் முதலெழுத் தொன்றுதல்.

(உ-ம்.) 'சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.'

முற்றுமோனை.—ஓரடியின் எல்லாச் சீர்களிலும் முதலெழுத் தொன்றுதல்.

(உ-ம்.) 'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.'

2. எதுகைத்தொடை :—

அடி எதுகை.—அடிதொறும் இரண்டாம் எழுத்து ஒன்றுதல்.

(உ-ம்.) 'ஓதையை யண்டமின் றுடைந்ததோ வெனக்
கோதைவில் லிறுத்தநம் குரிசிலுக் கெழில்
சீதையைக் கொடுத்தனன் தேவர்வாழ்த்த நல்
தாதையென் றுரைபெறு சனகன் என்பவே.'

இணை எதுகை.—ஓரடியின் முதலிரு சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றுதல்.

(உ-ம்.) 'பொன்னின் அன்ன பொறிசுணங் கேந்தி.'

பொழிப்பெதுகை.—ஓரடியின் முதலாம், மூன்றாம் சீர்களின் இரண்டாம் எழுத்து ஒன்றுதல்.

(உ-ம்.) 'பன்னருங் கோங்கி னன்னலங் கவற்றி.'

ஒரூஉ எதுகை.—ஓரடியின் முதலாம், நான்காம் சீர்களின் இரண்டாம் எழுத்து ஒன்றுதல்.

(உ-ம்.) 'அன்னம் பயிலிய தாமரை அன்ன.'

கூழை எதுகை.—ஓரடியின் முதலாம், இரண்டாம், மூன்றாம் சீரின் இரண்டாமெழுத்து ஒன்றுதல்.

(உ-ம்.) 'நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி.'

மேற்கதுவாய் எதுகை.—ஓரடியின் முதலாம், மூன்றாம், நான்காம் சீர்களின் இரண்டாம் எழுத்து ஒன்றுதல்.

(உ-ம்.) 'என்னையு மிடுக்கண் டுன்னுவித் தின்னடை.'

கீழ்க்கதுவாய் எதுகை.—ஓரடியின் முதலாம், இரண்டாம், நான்காம் சீர்களின் இரண்டாம் எழுத்து ஒன்றுதல்.

(உ-ம்.) 'அன்ன மென்பெடை போலப் பன்மலர்.'

முற்றெதுகை.—ஓரடியின் எல்லாச் சீர்களிலும் இரண்டாம் எழுத்து ஒன்றுதல்.

(உ-ம்.) 'கன்னியம் புன்னை யின்னிழ றுன்னிய.'

மோனை, எதுகைகளுள் வந்த வெழுத்தேயன்றி இனம், வர்க்கம், நெடில் வந்தும் தொடைகளுண்டாவதுண்டு.

(உ-ம்.) 'தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தார் காணப் படும்.' [வல்லின எதுகை.]

'ஆஆ வென்றே யஞ்சின ராழ்ந்தா—ரொருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டா—ரொருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தா—ரொருசாரார்
ஏதீர் நாகீ ரென்செய்து மென்று—ரொருசாரார்.'
[நெடிலெதுகை.]

மற்றவை வந்தவிடங் கண்டுகொள்க.

3. **முரண்தொடை :** ஓரடியில் மாறுபட்ட பொருள்தரும் பதங்கள் வருவது.

(உ-ம்.) 'சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன்.'

4. **இயைபுத்தொடை :** ஓரடியில் சீர்களின் ஈற்றெழுத்துக்கள் ஒன்றுதல்.

(உ-ம்.) 'புயலே குழலே மயிலே யியலே.'

5. **அளபெடைத்தொடை :** சீர்தொறும் அளபெடைகள் ஒன்றி வருதல்.

(உ-ம்.) 'ஏஎ ராஅ னீஇ ரூஉ ரன்.'

இவற்றிலுள்ள இணை, பொழிப்பு, ஒரூஉ முதலியவற்றை மோனைக்கும் எதுகைக்கும் கூறியதுபோலவே கொள்க.

ஓர் செய்யுளின் அடிதொறும் வரற்பாலதாய அடிமோனை, அடியெதுகை, அடிமுரண் முதலியன நீங்க, ஓரே அடியில் வரற்பாலனவாய இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, கீழ்க்கதுவாய், மேற்கதுவாய், முற்று எழும் தனித்தனி மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை ஆகிய ஐந்தொடுங் கூட உண்டாகும் தொடைகள் முப்பத்தைந்தாம்.

இது நீங்கலாக அந்தாதித்தொடை, இரட்டைத்தொடை, செந்தொடை யெனவும் மூன்றுண்டு.

அந்தாதித் தொடையாவது, ஓரடியின் ஈற்றுச்சொல் அடுத்த அடியின் முதலில் வர தொடுத்தலாம்.

(உ-ம்.) 'உலகுடன் விளக்கும் ஒளிதிகழ் அவிர்மதி
மதிநல னழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி அறிவனை
அறிவுசேர் உள்ளமோ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தர தென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே.'

இரட்டைத் தொடையாவது, ஓரடியின் எல்லாச்சீர்களும் ஒரே வார்த்தையாலேயே உண்டாவது.

(உ-ம்.) ‘ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்
விளக்கினுட் சீறெரி ஒக்குமே ஒக்கும்
குளக்கொட்டிப் பூவி னிறம்.’

செந்தொடை யென்பது, மோனை, எதுகை முதலிய எந்த வித அழகுமின்றி வருவதேயாம்.

(உ-ம்.) ‘பூத்த வேங்கை வியன்சினை ஏறி
மயிலினம் அகவும் நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே.’

செய்யுளியல். (*Poetry.*)

செய்யுள், பாவும் பாவினமு மென இருபிரிவாம்.

இவற்றுள் பா, வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நான்காம்.

மருட்பா, நூற்பா வெனவும் இரண்டுண்டு.

பாவினம். தாழிசை, துறை, விருத்தம் என மூன்றும். ஒவ்வோர் பாவிற்கும் இம்மூவினமுமுண்டு.

வெண்பா. ஈரடிச் சிறுமையும் ஏழடியின் மிக்குப் பெருமையு முடைத்தாய் ஈற்றடி தவிர்ந்த மற்றைய வடிகள் நாற்சீரான் வரப் பெற்று ஈற்றடி முச்சீரான் முடிவுபெற்றும் நாள், மலர், காசு, பிறப்பு எனும் வாய்பாட்டுச் சொற்களை இறுதியிலுடைத்து இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் பெற்றுவருவன வெண்பா வாகும்.

இவ்வெண்பா தானும் தான்பெற்ற அடிகளின் எண்ணுக்கியைய குறள்வெண்பா, சிந்தியல்வெண்பா, நேரிசைவெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடைவெண்பா வெனப் பெயர்பெறும்.

சவலைவெண்பா வெனவும் ஒன்றுண்டு:

குறள்வெண்பா. ஈரடியான் ஆகி ஒரு விகற்பமேனும் இரு விகற்பமேனும் பெற்று வருவது. ஒரு விகற்ப மென்பது அடி எதுகையை.

(உ-ம்.) ‘பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.’ [இது ‘பிறப்பு’ எனும் வாய்ப்பாட்டால் முடிந்த ஒருவிகற்பக் குறள்வெண்பா.]

‘மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.’ [இது ‘மலர்’ எனும் வாய்ப்பாட்டாற் முடிந்த இருவிகற்பக் குறள்வெண்பா.]

குறள்வெண்பாவிற் கினமாய் வருவன குறள்வெண்செந்துறையும் குறட்டாழிசையுமாம்.

குறள்வெண்செந்துறை. நான்கு அல்லது மேற்பட்ட சீர்களான் அளவொத்த ஈரடியான் வருபவை.

(உ-ம்.) ‘ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.’
‘தன்னுறு பாவத் தழல்சுட வாற்றா
தென்னினி செய்வலன் றினைவு கொண்டன்று.’

குறட்டாழிசை. குறள்வெண்செந்துறை சிதைந்து வருவனவும், நாற்சீரின் மிக்கசீரான் ஆகி முதலடியினும் இரண்டாமடி குறைந்து வருவனவும், குறள் வெண்பாக்களாய் வேற்றுத்தளை விரவி வருவனவுமாய மூன்றும் குறட்டாழிசையாம்.

(உ-ம்.) ‘பிண்டியி னீழற் பெருமான் பிடாத்தலை
மண்டிலந் தோன்று மால்வாழி யனைய’

[இது குறள் வெண்செந்துறை
சிதைந்துவந்த குறட்டாழிசை.]

‘நண்ணுவார் வினையை நாடொறு நற்றவர்க் கரசாய ஞானநற்
கண்ணினை னடியே யடைவார்கள் கற்றவரே’

[இது முதலடியினும் குறைந்த
ஈற்றடிக் குறட்டாழிசை.]

‘வண்டார்பூங் கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டைய ளல்லள் படி.’ [இது வேற்றுத்தளை விரவிய
குறள்வெண்பா.]

சிந்தியல்வெண்பா ஈற்றடி முச்சீராக மூன்றடியானாகி முதலடி நாற்சீரானும், இரண்டாமடி தனிச்சீர் பெற்றேனும் பெறாதேனும் வரும நாற்சீரானும், ஒருவிகற்பத்தானேனும் இருவிகற்பத்தானேனும் வரும்.

தனிச்சீர் பெற்றுவருவன நேரிசை யென்றும் பெறாதன இன்னிசை யென்றும் பெயர்பெறும்.

(உ-ம்.) ‘அறிந்தானை யேத்தி யறிவாங் கறிந்து
செறிந்தார்க்குச் செல்வ னுரைப்பச்—சிறந்தார்
சிறந்தமை யாராய்ந்து கொண்டு.’ [இது ஒருவிகற்ப நேரிசைச்
சிந்தியல்வெண்பா.]

‘நற்கொற்ற வாயினறுங் குவளைத்தார் கொண்டு
சுற்றும் வண்டார்ப்பப் புடைத்தாளே—பொற்றேரான்
பாலைநல் வாயில் மகள்.’ [இது இருவிகற்ப நேரிசைச்
சிந்தியல்வெண்பா].

‘ நறுநீல நெய்தலும் கொட்டியுந் தீண்டிப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
அறநாட்டுப் பெண்டி ரடி.’ [இது ஒருவிகற்ப இன்னிசைச் சிந்தியல்வெண்பா.]

‘ சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.’ [இது இருவிகற்ப இன்னிசைச் சிந்தியல்வெண்பா.]

நேரிசைவெண்பா. நாற்சீர்கொண்ட முதலடியும், முச்சீரும் தனிசசீரும் கொண்ட இரண்டாமடியும், நாற்சீரான மூன்றாமடியும் முச்சீர் ஈற்றடியாகவும், ஒருவிகற்பத்தானும் இருவிகற்பத்தானும் வருவன நேரிசைவெண்பா.

(உ-ம்.) ‘ உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கு மானஞ் சிதைக்கும்—மருவும்
ஒருவரோ டன்பழிக்கு மொன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து.’ [ஒருவிகற்ப நேரிசை வெண்பா.]

‘ காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்
ஈதன் மறுத்த லிவைகண்டாய்—போதில்
சினையாமை வைகுந் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி ’ [இருவிகற்ப நேரிசை வெண்பா.]

இன்னிசைவெண்பா. தனிசசொற் பெறாது நேரிசை வெண்பாவைப்போல் வருவனவும், தனிச்சொற்பெற்றும் இருவிகற்பத்தின் மேற்பட்ட விகற்பத்தான் வருவனவும், இரண்டாமடியன்றி மூன்றாமடியினும் அல்லது எல்லா அடிகளினும் தனிச்சொற்பெற்று வருவனவும் இன்னிசைவெண்பா.

(உ-ம்.) ‘ வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.’ [ஒருவிகற்ப இன்னிசை வெண்பா.]

'இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் தீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா ரறம்.' [இருவிகற்ப இன்னிசை வெண்பா.]

'அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற்—றிங்கள்
மறுவாற்றுஞ் சான்றோ ரஃதாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்.' [இரண்டாமடி தனிச்சீர்பெற்றும் இருவிகற்புக்கு மேற்பட்டமையின் இன்னிசைவெண்பா.]

'வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போக மவரவ ராற்றால்
விளங்காய் திரட்டினா ரில்லைக்—களங்கனியை
காரெனச் செய்தாரு மில்.' [மூன்றாமடியிற் தனிச்சீர்பெற்ற இன்னிசைவெண்பா.]

'மழையின்றி மாநிலத்தார்க் கில்லை—மழையும்
தவமிலா னில்வழி யில்லை—தவமும்
அரசிலா னில்வழி யில்லை—அரசனும்
இல்வாழ்வா னில்வழி யில்.' [அடிதொறும் ஒரூஉத்தொடையாகத் தனிசசொல் பெற்று வந்த இன்னிசைவெண்பா.]

பஃறொடைவெண்பா. நாலடியின் அதிகபபட்ட அடிகளான் வருபவை யெலாம் பஃறொடைவெண்பாவாம்.

(உ-ம்). 'வையக மெல்லாங் கழனியா வையகத்துச்
செய்யகமே நாற்றிசையிற் றேயங்கள்—செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள் சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாம் கட்டியுட்
டானேற்ற மாய சருக்கரை மாமணியே
யானேற்றான் கச்சி யகம்.' [எழடிப் பஃறொடை வெண்பா.]

வெண்பாவினம். சீர், தளை முதலியவற்றில் பெரும்பாலும் வெண்பாவை யொத்திருப்பவை.

வெண்டாழிசை. அடி யொருமூன்றுடைத்தாய் ஈற்றடி சிந்தடியாய் வேற்றுத்தளை விரவி வருவது. ஒருபொருண்மேல் மூன்று சிந்தியல்வெண்பா அடுக்கிவருவதுமாம்.

(உ-ம்.) 'நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யா
ரன்பு வேண்டு பவர்.' [மூன்றடியுடைய வெண்டாழிசை.]

'அம்பேருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
கொம்பே றுடையான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வம்பே பிறந்து விடல்.

வானேருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
ரீனாகம் பூண்டான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வீணே பிறந்து விடல்.

கோளாருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
யாளாக வாண்டான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வாளா பிறந்து விடல்.' [ஒரு பொருள்மேல் சிந்தியல் வெண்பா மூன்றடுக்கிவந்த வெண்டாழிசை.]

வெண்டுறை. மூன்றடிச் சிறுமையும் ஏழடிப் பெருமையுமுடைத்தாய பின்னடிகள் முன்னடிகளினும் சீர்கள் குறைந்து வருவதாம்.

(உதாரணம்.)

'குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட் குலைமேற் பாய
வழலெரியின் சூழ்கினவா லந்தோ வளியவென் றயல்வாழ் மந்தி
கலுழ்வனபோ னெஞ்சபர்ந்த கல்லருவி தூஉ
நீழல்வரை நன்னாட நீப்பனோ வல்லன்.' [பில்கி

'கூற்றிருக்கு மடலாழிக் குரிசின்முத லோரிறைஞ்சக் கொழுந்தேன்
வூற்றிருக்குந் தில்லைவனத் தசும்பிருக்கும் பசும்பொன்மன்றத் தொரு
வண்டுபா டச்சுடர் மகுடமா டப்பிறைத் [தாளுன்றி
துண்டமா டப்புலித் தோலுமா டப்பகி
ரண்டமா டக்குலைத் தகிலமா டக்கருங்
கொண்டலோ டுங்குழற் கோதையோ டுங்கறைக்
கண்டனா டுந்திறம் காண்மினோ காண்மினோ.' [இது ஏழடி வெற்றொலி வெண்டுறை.]

வெளிவிருத்தம். மூன்றடியால் அல்லது நான்கடியால் அடி தொறும் ஒரே சொல்லை தனிச்சொல்லாகப் பெற்றுவருவன வெளி விருத்தமாகும்.

(உதாரணம்.)

'கொண்டல் முழங்கினவால் கோபம் பரந்தனவா—லென்செய்கோயான்
வண்டு வரிபாட வார்தவளம் பூத்தனவா—லென்செய்கோயான்
எண்டிசையுந் தோகை யிருந்தகவி யேங்கினவா—லென்செய்கோயான்.'
[இது மூன்றடியால் வந்த வெளிவிருத்தம்.]

'ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா—ரொருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டா—ரொருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தா—ரொருசாரார்
எகீர் நாகீ ரென்செய்து மென்றா—ரொருசாரார்.' [இது நான்கடியால் வந்த வெளிவிருத்தம்.]

ஆசிரியப்பா. மூவடிச் சிறுமை யுடைத்து (அளவடியாய்) இயற்சீர் பயின்றும் அயற்சீர் விரவியும், தன்றளை தழுவியும் பிறதளை மயங்கியும். நிரைநடுவாகிய கூவிளங்கனி, கருவிளங்கனி எனும் இருசீரும் வருதலில்லையாய் வழங்குவது.

இது நேரிசையாசிரியப்பா, இணைக்குறளாசிரியப்பா, நிலைமண்டிலவாசிரியப்பா, அடிமறிமண்டிலவாசிரியப்பா வென நான்கு பிரிவுடைத்து.

நேரிசையாசிரியப்பா. ஈற்றடியி னயலடி சிந்தடியால் வருவது.

(உ-ம்.) 'நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே.'

இணைக்குறளாசிரியப்பா. அந்தமும் ஆதியும் அளவடியாய் இடையிலுள்ளவடிகள் குறளடியாகவும், சிந்தடியாகவும், கலந்தும் வருவது.

(உ-ம்.) 'நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து தீரத் தீரும்
சார னாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே.' [ஈற்றயலடி யிரண்டும் சிந்தடியாய் வந்தன.]

சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானும் நனிபல கலத்தன் மன்னே
யென்பொடு தடிபடு
வழியெல் லாமெமக் கீயு மன்னே
யம்பொடு வேனுழை
வழியெல் லாந்தா னிற்கு மன்னே
நரந்த நாறுந் தன்கையால்
புலவு நாறு மென்றலை தைவரு மன்னே
யருங்கலை யிரும்பாண ரகன்மண்டைத் துளையுரீஇ
யிரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பார்வை சோர
வஞ்சொனுண் டேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்றுவீழ்ந் தன்றவன் றிருநிறத் திலங்கிய வேலே
யாசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
வினிப் பாடுநரு மில்லைப்
பாடுநர்க் கொன்றீ குநரு மில்லைப்
பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்கொன்
றீயாது வீயு முயிர்தவப் பலவே.' [இதில் இடையிடையே குறளடியும் சிந்தடியும் கலந்து வந்தன.]

நிலைமண்டிலவாசிரியப்பா. எல்லாவடிகளும் நாற்சீர் பெற்ற அளவடிகளாய் வருவது.

(உ-ம்.) 'வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.'

அடிமறிமண்டிலவாசிரியப்பா. அளவொத்த அடிகளாலாகி எவ்வடியை எவ்விடத்து வைத்துப் படிக்கினும் பொருளும் ஓசையுட மாறுபடாது வருவது.

(உ-ம்.) 'தீர்த்த மென்பது சிவகங் கையே
ஏத்தருந் தல மெழிற்புலி யூரே
மூர்த்தி யம்பலக் கூத்தன துருவே
யேத்த ருந்தல மெழிற்புலி யூரே.

[இதிலுள அடிகளை இடம்பிறழ வைத்துப் படிக்கினும் பொருளும் ஓசையும் பிறழாமை காண்க.]

ஆசிரியப்பாவினங்கள் :—

ஆசிரியத்தாழிசை. மூன்றடியால் தம்முள் அளவொத்து வருவனவும், இவ்வாறு வந்தவை தம்முள் மூன்றடுக்கி யொருபொருள் மேல் வருவனவுமாம்.

(உ-ம்.) 'வானுற நிமிர்ந்தனை வையக மளந்தனை
பான்மதி விடுத்தனை பல்லுயி ரோம்பினை
நீனிற வண்ணநின் னிறைகழ றொழுதனம்.'

[இது தனிமை.]

'கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி.

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி.

கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லிநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி.'

[மூன்றடுக்கி வந்தது.]

ஆசிரியத்துறை. நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து வருவனவும், இடையடிகள் சீர்குறைந்தும், இடையிடை யடிகள் மடக்காகவும் வரும்.

(உ-ம்.) 'கரைபொரு கான்யாற்றங் கல்லதரெம் முள்ளி வருவீராயின்
அரையிருள் யாமத் தடுபுலியேறு நும்மஞ்சி யகன்றுபோக
நரையுரு மேறுநுங் கைவேலஞ்சு நும்மை
வரையர மங்கையர் வெளவுத லஞ்சுதும் வாரலையோ.'

[ஈற்றயலடி குறைந்து வந்தது.]

'இரங்கு குயின்முழவா யின்னிசையாழ் தேனு
ஆரங்க மணிபொழிலா வாடும்போலு மிளவேனில்
அரங்க மணிபொழிலா வாடுமாயின்
மரங்கொன் மணந்தகன்றார் நெஞ்சமென் செய்த்திளவேனில்.'

[இடைமடக்கு வந்தது காண்க.]

ஆசிரியவிருத்தம். தம்முள் அளவொத்த கழிநெடிலடிகளான் வருவது.

(உதாரணம்.)

'விடஞ்சூ ழரவி னிடைநுடங்க மினல்வாள் வீசி விரையார்வேங்
கடல்சூழ் நாடன் காளிங்கன் கதிர்வேல் பாடு மாதங்கி
வடஞ்சேர் கொங்கை மலைதாந்தாம் வடிக்கண் ணீல மலர்தாந்தாந்
தடந்தோ ளிரண்டும் வேய்தாந்தா மென்னுந் தன்கைத் தண்ணுமையே.'

[அறுசீர்க்கழிநெடிலடியால் வந்த
ஆசிரியவிருத்தம்.]

'கைத்த லத்த ழற்க ணிச்சி லைத்தி டப்பு றத்தொ ருத்தி
கட்க டைப்ப டைக்கி லோத தத்த திறலோரா
முத்த லைப்ப டைக்க ரத்தெ மத்தர் சிற்ச பைக்கு ணிற்கு
முக்க ணக்க ருக்கொ ருத்தர் மொழியாரோ
நித்தி லத்தி னைப்ப தித்த கச்ச றுத்த டிக்க ணத்து
நிற்கு மற்ற தத்த னத்தி னிடையாவே
ரொத்தி ரத்தி னிற்றெ டுத்து விட்டு நெட்ட யிற்க ணித்தி
லக்க ணூற்றி டச்செய் வீக்கு மதுதானே.'

[அறுசீரின் மிக்கசீர் கழிநெடிலடி
யாசிரிய விருத்தம்.]

செய்யுள்நடைக் குணம்.

(Literary Diction in Poetry.)

யாப்பிலக்கணச் செய்யுளியலிற் கூறப்பட்டவையே செய்யுளாம்.

ஓர் செய்யுள் தானே முடிந்த பொருளைக் கொடுத்தலு முண்டு. அன்றி இரண்டு முதலாகத் தொடர்ந்து முடிந்தபொருளைத் தருதலு முண்டு.

இவற்றுள் முந்தியதை முத்தகம் எனவும், பிந்தியதைக் குளகம், எனவும் அழைப்பர்.

தொடர்ச்சியின்றி ஒருவராலேனும் பலராலேனும் பாடப்பட்டுப் பொருள், இடம், காலம், தொழில், கலி, அளவு முதலிய காரணமாக ஒன்றாய்த் தொகுக்கப்படுவன தொகைநிலைச்செய்யுள் என வழங்கப்படும்.

(உதாரணம்.)

புறநானூறு	... பொருள்.	யானைத்தொழில்	... தொழில்.
களவழி	... இடம்.	கலித்தொகை	... கலி.
கார்நாற்பது	... காலம்.	பன்னிருபடலம்	.. அளவு.

செய்யுட்கள் தொடர்ந்து வரும்போது அவை பொருட்டொடர்நிலை யெனவும் சொற்றொடர்நிலை யெனவும், இருபிரிவாம்.

பொருட்டொடர்நிலை. பெருங்காப்பியம், காப்பியம் என இருவகைத்து.

பெருங்காப்பியம். வாழ்த்து, வணக்கம், எடுத்துக்கொண்ட பொருள் இவற்றுள் ஒன்றனை முதலுடைத்து, அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பெரும்பொருளையும் பயந்து, சிறந்தநாயக னொருவனை யுடையதாய், மலை, கடல், நாடு, நகர், பருவம், சூரியோதயம், சந்திரோதயம் முதலியவற்றின் வர்ணனையடக்கி, மணம் பூணல், முடிசூட்டல், பொழில் புனல் விளையாட்டுகள், உண்டாட்டு, மகப்பேறு, புலவியிற் புலத்தல், கலவியிற் களித்தல் முதலிய விவரங்கள் செறிந்து, மந்திரம், தூது, மேற்செலவு, போர்புரிதல், வெற்றிபெறுதல் என்பவற்றை வர்ணித்து, சருக்கம், இலம்பகம்,

பரிச்சேதம் முதலியவற்றுளொருபாகுபாடுடைத்து, மிக்கசுவையும் பாவமு முடைமையால் கவிஞரால் பல அலங்காரங்களுடன் பாடப் படுவது. பிற்கூறியவற்றுள் சில குறையினும் பெருங்காப்பியமே யாம்.

காப்பியம் அல்லது சிறுகாப்பியம். மேற்கூறிய வர்ணனைகளுள் பல சில குறைந்தும் அறம், பொருள், இன்பம், வீடு இவற்றுள் ஒன்றும் பலவும் குறைந்தும் வருவது.

இவை இரண்டும் ஒருதிறப்பாட்டானும் பலதிறப்பாட்டானும் அமையவுறும்.

சொற்றொடர்நிலை. ஓர் செய்யுளின் அந்தம் அடுத்தசெய்யுளின் முதலாக வரத்தொடுப்பது. அந்தாதி முதலியன.

செய்யுட்களில் பொருளும் சொல்லும் அமைந்திருக்கும் விதம் நோக்கி அவற்றின்தன்மை, செறிவு முதலாகிய பலவிதமா மெனக் கூறுவர். அவை வருமாறு:—

1. செறிவு. நெகிழிசையில்லாமல் வல்லினமெய் அதிகமாய்ப் பொருந்தத் தொடுப்பது.

(உ-ம்.) ‘கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.’

இச்செய்யுளில் வல்லின வெழுத்துக்களே மிகுந்து வல்லொலி யொலிப்பது

2. தெளிவு. பொருள் தெள்ளிதின்புலப்படத் தொடுப்பது.

(உ-ம்.) ‘பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்.’

3. சமநிலை. வலி, மெலி, இடை, நெடில், குறில் முதலிய எல்லா எழுத்துக்களும் விரவிவரத் தொடுப்பது.

(உ-ம்.) ‘சோக மெனன்கொ விதழிபொன் னாக்கின சோர்குழலாய்
மேக முழங்க விரைசூழ் தளவங் கொடியெடுப்ப
மாக நெருங்கவண் டானங் களிவண்டு பாடவெங்குந்
தோகை நடஞ்செய வன்பர்திண் டேரினித் தோன்றியதே.’

இச்செய்யுளில் வல்லினமிகுந்த செறிவிற்போலன்றி பல்வித வெழுத் துக்களும் சமமாகவந்தமை நோக்குக.

4. **இன்பம்.** மோனை, எதுகை முதலிய பொருந்த, சொல்லும் பொருளும் சுவைபடத் தொடுப்பது.

(உ-ம்.) 'வேய டங்கின வேலை யடங்கின
தீய டங்கின திங்களுங் கங்குலும்
போய டங்கின மன்மதன் போரொலாம்
வாய டங்கின வண்குழு தங்களே.'

'மயங்காட்டம் புரிகணிகை மடமாதர் மனமருட்டி
இயங்காட்டி லயங்காட்டி யெழில்காட்டி விழிகாட்டி
நயங்காட்டி பயங்காட்டி நகைகாட்டிச் சிகைகாட்டி
குயங்காட்டிக் காமுகரைக் குரங்காட்ட மாட்டுவரால்.'

இச்செய்யுட்களில் மோனையும் எதுகையும் செறிந்து சொற்சுவை படக் கிடந்தமை காண்க.

5. **ஒழுகிசை.** கேட்பவர் வெறுப்புறுவண்ணம் மிருதுவாய்ச் செல்வது.

(உ-ம்.) 'உள்ளிய வெல்லா முடனெய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின்.'

6. **உதாரம்.** தொடுக்கப்பட்ட வார்த்தைகள் குறிப்பினால் வேறுபொருள் பயப்பது.

(உ-ம்.) 'கண்ண கன்றபே ரகழியி லுழக்கிய கரிகள்
தண்ணந் தாமரைத் தாளெனத் தடக்கையாற் பிலத்தில்
நண்ணுஞ் சேடனை யெடுத்ததன் கூடிகையி னூறி
உண்ணி வந்தொளிர் மணியினை லுற்கையென் றெறியும்.'

இச்செய்யுளில் கரிகள் அகழியில் தாமரை நாளமென்று ஆதிசேடனை மேலெடுக்குமெனக் கூறிய குறிப்பினால், அவ்வகழி பாதாளலோகவரை ஆழ்ந்திருந்ததெனக் கூறியதாயிற்று.

7. **உய்த்தலிற் பொருண்மை.** சொற்களை வருவித்துச் சேர்க்கும் அவசியமின்றிப் பொருள்புலப்படுதற்கு அவசியமான எல்லாச் சொற்களும் செய்யுளில் அடங்கியிருக்கத் தொடுப்பது.

(உதாரணம்.)

'பொன்னகரந் தனிப்புரக்கும் புரந்தரனு ரதமுனிவன் புகுதலோடு
முன்னரியற் றியதவத்தி னெய்துபயு னிப்பிறப்பின் முடிந்ததாமென்
றன்னமுனி வானுவப்ப வருச்சியபாத் தியமுதலா வனைத்துநல்கி
யின்னமுத முருவனபோ லினிதுரைக்குமுகமனொடு மிருக்கையீந்தான்.'

'சீவ நெறியை யறமயக்கி ஜெகத்தை யகத்துப் புடைவிளைந்த
பாவ நிசியை யிருஞ்சிறைாற் பறக்க வடித்துப் பகைத்தோட்டிப்
பூவ லயத்துக் கிரகூணியம் பொலிய வருபுண் ணியப்பகலை
வாவென் றுரக்க விளிப்பதுபோன் றெழுந்தமத வாரணத் தழனி.'

8. காந்தம். உலகநடையை யனுசரித்து ஒன்றைப்புகழ்தல்.

(உ-ம்.) 'சோலைவாய் விளைந்த பாவச் சுமைசுமந் ததனுலிந்தச்
சோலைவா யணைந்து தேவ சுதன்றம தாத்து மத்தில்
மூலகா ரணமாய் நிற்கு முழுமுதன் முனிவு தாங்கிச்
சாலநோ வடைந்து தீர்த்தல் தகுதியென் றடைந்தார்போலும்.'

தினகரன் கதிரொளி சேர்கி லாமையாற்
கனவிரு ணிறைந்தவிக் காமர் சோலைதான்
புனிதநல் லாவியின் கதிர்பு குந்திடா
மனமென லாயபொய் மதமும் போன்றது.'

9. வலி. தொகைநிலைத்தொடர் மிகுந்துவரத் தொடுப்பது.

(உ-ம்.) 'மாமுத்த வெண்குடையான் மால்களிற்றான் வண்டிரைக்குந்
தாமத் தரிச்சந் திரன்சுவர்க்கி—நாமத்தார்
பாவேய்ந்த செந்தமிழ்நா மென்னப் பரந்ததே
கோவேந்தர் செல்வக் குழாம்.'

இச்செய்யுளில் பத்துக்குமேற்பட்ட தொகைநிலைத்தொடர்கள் இருக்கின்றன.

10. சமாதி. ஒருபொருட்குரிய வினையை அதற்கு ஒப்புமையுடைய பிறிதொரு பொருள்மேல் வைத்துக் கூறுவது.

(உ-ம்.) 'கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள்.'

இச்செய்யுளில் 'தோள் உரைக்கும்' எனக் கூறினர்.

செய்யுளில் வார்த்தைகளை யொழுங்கு படுத்திப் பொருள் கொள்ளுதல் எட்டுவிதமாம். அவற்றைப் பொருள்கோள் என்பர்.

1. யாற்றுநீர்ப் பொருள்கோள். ஆற்றுநீர் முன்பின் திரும்புதலின்றி எதிர்முகமாய் ஓடுவதுபோல் சொற்கள் முன்பின் மாறாமல் நேராகப் பொருள்கொள்ளப்படுவது.

(உ-ம்.) 'அன்புரு வான நம்பிக் கருந்தமா கார மான்ம
துன்பமே பருகும் பானஞ் சொரிகணீ ராத வாலே
என்பெலாங் கட்டு விட்ட தெழிற்றிரு மேனி வாடித்
தன்பல மோடு போலக் காய்ந்தறச் சலித்த தம்மா

*சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றோற்றம்போன்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை திறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே.'*

2\. மொழிமாற்றுப் பொருள்கோள். இரண்டு மொழிகட்குப் பயனிலை கூறுமிடத்து, பொருந்திய பயனிலையைக் கூறாது பொருந்தாத வொன்றைச்சேர்த்து ஒரே அடியிற் கூறுவது.

(உ-ம்.) *'சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.'*

3\. நிரனிறைப் பொருள்கோள். செய்யுளில் பெயர்ச் சொற்களையும் அவற்றின் பயனிலைகளையும் வெவ்வேறாக நேர் வரிசையாகவேனும் எதிர் வரிசையாகவேனும் வைப்பது.

(உதாரணம்.)

*1 2 3 1 2 3
'கொடி குவளை கொட்டை நுசுப்புண் கண் மேனி
1 2 3 1 2 3
மதி பவள முத்த முகம் வாய் முறுவல்
1 2 3 1 2 3
பிடி பிணை மஞ்ஞை நடை நோக்குச் சாயல்
வடிவினளே வஞ்சி மகள்.'*

இதில் ஒவ்வோர் அடியிலும் மும்மூன்று எழுவாய்களும் அவற்றின் வரிசையில் வைக்கப்பட்ட மும்மூன்று பயனிலைகளும் வந்தமை காண்க. இது முறைநிரனிறை.

*'காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைச்சேர்ப்ப
போதுசேர் தார்மார்ப போர்ச்செழிய—நீதியான்
மண்ணமிர்த மங்கையர்தோண் மாற்றாரை யேற்றார்க்கு
நுண்ணிய வாய பொருள்.'*

கா ...மண்.	*தாழ் ...மாற்றாரை.*
து ...அமிர்த.	*குழை ...எற்றார்க்கு.*
சேர் ...மங்கையர்தோள்.	*ஆய் ...நுண்ணியவாயபொருள்*

என முதற்கூறிய ஆறுவினைக்கும் பின்னர்வரிசையிற்றானே பெயர்ச் சொற்களை வைக்கப்பட்டிருக்கிறது. இதுவும் முறைநிரனிறை.

*'மானென்கோ-மற்றே மறலியென்கோ மின்னியலாள்
தானென்கோ தையலவள் தாழ்விழியே—எனென்கா
தென்னிதயம் போழ்ந்தேயெ னின்னுயிரை யுண்டபினுங்
கொன்னே மருண்டதிற லாள்.'*

விழியை மான், மறலி, வாள் இவற்றுக்கு ஒப்பிட்டுப் பின் அவற்றிற் கொப்ப விழியின் செயலை, போழ்ந்து, உயிரையுண்டு, மருண்டு என எதிர் வரிசையில் வைத்தது எதிர்நிரனிறை.

4. பூட்டுவிற் பொருள்கோள். செய்யுள் முதற்சொல்லும் இறுதிச்சொல்லும் பொருள்படப் பொருந்துவது.

(உ-ம்.) 'திறந்திடுமின் றீயவை பிற்காண்டு மாத
ரிறந்துபடிற் பெரிதா மேத—முறந்தையர்கோன்
றண்ணார மார்பிற் றமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு.'

இச்செய்யுள் 'திறந்திடுமின் கதவு' என முடிந்தமை காண்க.

5. தாப்பிசைப் பொருள்கோள். செய்யுளில் இடைநின்ற சொல் முதலிலும் ஈற்றிலும் சென்று பொருள் கொடுப்பது.

(உ-ம்.) 'உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு.'
'கூத்தாட்ட வைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று.'

முதற்செய்யுளில் 'ஊன்' என்பதும், பிந்தியசெய்யுளில் 'பெருஞ்செல்வம்' என்பதும், செய்யுளின் இடைநின்றும் முதலிலும் ஈற்றிலும் சேர்ந்து பொருள் பயந்தன.

6. அளைமறிபாப்புப் பொருள்கோள். செய்யுளில் கடைநின்ற சொல் முதலிலும் இடையிலும் சென்று பொருள் கொள்ளப் படுவது.

(உ-ம்.) 'தாழ்ந்தவு ணர்வினராய்த் தாளுடைந்து
தண்டேன்றித் தளர்வார் தாமுஞ்
சூழ்ந்த வினையாக்கை சுடவிழிந்து
நாற்கதியிற் சுழல்வார் தாமு
மூழ்த்த பிணிநலிய முன்செய்த
வினையென்றே முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து *
நெறிமுன்னி முயலா தாரே.'

'வானெய்து நெறிமுன்னி முயலாதாரே' என்பது செய்யுளின் முதலிலும் இடையிலும் சென்று பொருள் கொடுத்தது.

7. **கொண்கூட்டுப் பொருள்கோள்.** செய்யுள் முழுவதினு முள்ள சொற்களை பொருள் இசைதற்கேதுவாக முன்பின்னாய் வைத்துப் பொருள்கொள்வது.

(உ-ம்.) ‘தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி
யஞ்சனத் தன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார் வரின்.’

இதனை அந்வயப்படுத்திப் பொருள் கொள்ளுமிடத்து ‘வங்கத்துச் சென்றார் வரின் அஞ்சனத்தன்ன பைங்கூந்தலை யுடையாள் மாமேனிமேல் தெங்கங்காய்போலத் திரண்டுருண்ட கோழி வெண்முட்டை யுடைத்தன்ன பசலை தணிவாம்’ எனவரும்.

8. அடிமறிமாற்றுப் பொருள்கோள். பொருளுக்கு ஏற்ற விடத்து அடியை மாற்றிப் பொருள்கொள்ளப்படுவனவும், அடிகளை முன்பின்னாக வைத்தும் பொருளும் ஓசையும் மாறுபடா திருப்பனவுமாம்.

(உதாரணம்.)

4. ‘நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
1. கொடுத்துத்தான் றுய்ப்பினு மீண்டுங்கா லீண்டு
3. மிடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்
2. விடுக்கும் வினையுலந்தக் கால்.’

இச்செய்யுளினடிகளை பொருளுக்கேற்ப வரிசைமாறிக் கூறிப் பொருள் கொள்க.

‘மாறாக் காதலர் மலைமறந் தனரே
யாறாக் கட்பனி வரலா னாவே
வேறா மென்றோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழியான் வாழு மாறே.’

இச்செய்யுளில் எவ்வடியை எவ்விடத்து வைப்பினும் பொருளும் ஓசையும் வேறுபடாமை காண்க.

செய்யுளினுள்ள பதங்களை யாப்பிலக்கணத்திற் கண்ட எதுகை, மோனை, அசை, சீர் முதலியவற்றுக்கியைய வலித்தும் மெலித்தும், நீட்டியும் குறுக்கியும் கூறுதலுமுண்டு. அவற்றைச் செய்யுள் விகார மென்பர்.

அவையாவன :—வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல் என ஆறும்.

1. **வலித்தல்.** மெல்லொற்றை வல்லொற்றாக்கல்.

(உ-ம்.) ‘*குறுத்தாட் பூதஞ்சுமந்த.*’ [*குறுந்தாள் = குறுத்தாள்.*]

2. **மெலித்தல்.** வல்லொற்றை மெல்லொற்றாக்கல்.

(உ-ம்.) ‘*தண்டை யினக்கிளி கடிவோன்.*’ [*தட்டை = தண்டை.*]

3. நீட்டல். குறிலை நெடிலாக்கல்.

(உ-ம்.) ‘*தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற்*
போத்தறார் புல்லறிவி னார்.’ பொத்தறார் = போத்தறார்.]

4. **குறுக்கல்.** நெடிலைக் குறிலாக்கல்.

(உ-ம்.) ‘*நன்றென்றேன் றியேன்.*’ [*தீயேன் = தியேன்.*]

5. **விரித்தல்.** இல்லாத வெழுத்தைக் கூட்டுதல்.

(உ-ம்.) ‘*சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே.*’ [*விளையுமே = விளை யும்மே.*]

6. **தொகுத்தல்.** உள்ள வெழுத்தை விட்டுவிடுதல்.

(உ-ம்.) ‘*தொட்டனைத் தூறு மணற் கேணி.*’ [*தொட்டது = தொட்டு.*]

செய்யுள்நடைக் குற்றம்.

(*Faults in Poetry.*)

செய்யுள் இயற்றும்போது கவனித்து விலக்கவேண்டிய வழுக்கள்.

1. பிரிபொருட் சொற்றொடர். ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத பலபொருளை ஒரு செய்யுளில் வைத்துப் பாடுவது.

(உ-ம்.) ‘கொண்டன் மிசைமுழங்கக் கோபம் பரந்தனவாற்
றெண்டிரை நீரெல்லாம் திருமுகியே—உண்டுமிழ்ந்தான்
வஞ்சியோர் கோமான் வரவொழிக மற்றிவளோர்
பஞ்சியார் செஞ்சீறடி.’

வெறியுற்றானொருவன், பித்துற்றானொருவன் இங்ஙனம் கூறுகின்றானெனக் கூறுமமையத்து இது விலக்கப்படுவதன்று.

2. மாறுபடு பொருண்மொழி. ஒரு செய்யுளில் ஒன்று கூறி அதற்கு மாறுபட்டதை அச்செய்யுளிலேயே கூறுவது.

(உ-ம்.) ‘மின்னார் மணிப்பைம் பூண்வேந்தே நினக்குலகில்
இன்னாதவர் யாருமில்லையால்—தென்னார்
தலமுழுதுங் கூற்றங் கோளவேதண்டு நீயே
தலமுழுதுந் தாங்க றகும்.’

இதுவும் காம மிகுதியாலேனும் அச்சமிகுதியாலேனும் கூறுமிடத்து விலக்கப்படாது.

3. மொழிந்தது மொழிவு. கூறியதொன்றையே திரும்பவும் கூறுவது.

(உ-ம்.) ‘அங்கமிலாத வநங்கன் றலம் புரியும்
வெங்கணையும் காக்குங்கொல் வேல்வேந்தர்—தங்கோன்
நிலையார்த் தொடையதல னேரிழைக்காய் முன்னோர்
மலையால் கடல்கடைந்தான் மால்.’

இதுவும் விரைவினும் சிறப்பினும் விலக்கப்படுவதன்று.

4. கவர்படு பொருள்மொழி. ஒன்றைக் குறிக்க வந்த சொல் பலதைக் குறித்து சந்தேகமெழுப்புவது.

(உ-ம்.) 'புயலே புறம்பொதிந்து பூந்தா தொழுக்கி
மயிலே கடவுளர்க்கு வாய்த்தாச்—செயலை
எரிமருவு பூந்துணர்த்தாய் யாவருக்கு மூடாடார்
அரிமருவு சோலை யகத்து.' [அரி—வண்டு, சிங்கம் முதலியன.]

இது சந்தேகம் நிகழ்ந்தகாலையும் பொருள் பொருந்துமேல் விலக்கப்படுவதன்று.

(உ-ம்.) 'வானவர்க டாழ்ந்து பணிகேட்ப மாறாய
தானவர்கள் சுற்றந் தடிந்தொழித்த—மேன்மை
அரியே அனைத்துலகுங் காக்குங் கடவுள்
எரியே மறையோர்க் கிறை!'

[அரி=விட்டுணு, இந்திரன். இருபொருளும் ஒக்கும்.]

5. நிரனிறைவழு. கூறிய வரிசையிற் பொருள் விளங்காது வைத்தல்.

1 2 3 4
(உ-ம்.) 'தெற்குக் குடக்கு வடக்குக் குணக்குமேல்
நிற்குந் திறத்துலகை நீடளிக்கும்—பொற்பினார்
3 2 4 1
ஈரெண் கலையோன் வருண னிரவிய மன்
யாரும் பகழியல்பி னார்.'

[இது பொருள் விளங்குமேல் விலக்கப்படுவதன்று.]

6. சொல்வழு. இலக்கணமில்லாச் சொல் விசைத்தல்.

(உ-ம்.) 'யாவகைய தாயர்க்கு மெங்களுக்கு மெந்தையர்க்கும்
ஆவி யிவளே யனையவர்க்கும்—கோவே
நுணக்கபய மிந்த நுண்மருங் குன்மாது
தனக்கிடரொன் றில்லாமற் றூங்கு.'

[இத்தகையசொல் சான்றோர் வழக்கினதாயில் விலக்கப்படுவதன்று.]

7. யதிவழு. ஓசைக்கிசைய சீர்பிரிக்கத் தப்பாய் அமைவது.

(உ-ம்.) ‘மாடு பயிலும் வரையாளி மால்யானைக்
கோடு புயத்தூண்டுழலுங் கொள்கைத்தாம்—காடு
அரிதா மியல்பிற் றரையிருட்கண் வாரல்
பெரிதாகு மைய பிழை.’

[வகையுளியாயின் விலக்கப்படுவதன்று.]

8. செய்யுள்வழு. யாப்பிலக்கணத்தோடு பொருந்தாது இசைப்பது.

(உ-ம்.) ‘ஆதரந் துயர்தர வயர்தருங் கொடிக்குப்
பூதலம் புனைபுகழ் வளவன்—தாதரு
தாங்கரும்பா லன்றித் தணியுமோ தீரநங்கன்
பூங்கரும்பால் வந்தடுத்த போர்.’

[முதலிரு அடிகள் ஆசிரியம். பின் வெண்பா.]

இது ரிஷிகள் முதலியோராற் சொல்லப்படின் விலக்கப்படுவதன்று.

9. சந்திவழு. புணர்ச்சி விதிக்கு மாறாக வருவது.

10. இடமலைவு. ஓரிடத்துக் குரியதை பிறவிடத்துக் குரியதாக் கூறுவது.

(உ-ம்.) ‘தென்மலையின் மான்மதமுஞ் சாமரையுந் தேமருசீர்ப்
பொன்மலையின் சந்தனமு மாரமும்—பன்முறையும்
பொன்னி வளநாடன் முன்றிற் பொதுளுமே
மன்னர் திறைகொணர வந்து.’

11. காலமலைவு. பொழுது, பருவம் இவற்றில் ஒன்றற்குரியதை பிறவற்றுக் குரியதுபோற் கூறுவது.

(உ-ம்.) ‘செங்கமலம் வாய்குவியத் தேங்குமுதங் கண்மலர
எங்கு நெடுவானின் மீனிமைப்பப்—பொங்குதயத்
தேராழி வெய்யோ னுகந்தான் மலர்ந்ததே
நீராழி சூழ்ந்த நிலம்.’ [இது பொழுதுமலைவு.]

‘காதலர் வாரார் களிக்கு மயிலகவத்
தாதவிழ் பூங்குருந்தின் தண்பணையின்—மீதே
தளவேர் முகைநெகிழத் தண்கொன்றை பூப்ப [கார்க்குரியன.]
இளவேனில் வந்த திதோ.’ [இது பருவமலைவு.]

12. கலைமலைவு. அறுபத்து நான்கு கலைகளுள் கூறியவற்றை ஒன்றுக்கொன்று மாற்றிச்சொல்வது.

(உ-ம்.) 'ஐந்தாம் நரம்பாம் பகைவிரவா தாருக
வந்த கிளைகொள்ள நான்காய—முந்தை
இணைகொண்ட யாழியற்று மேந்திழைதன் னாவித்
துணைவன் புகழே தொடுத்து.'

[சங்கீதசாஸ்திர மலைவு: 5 நரம்பு கிளை.
6 ,, பகை.
4 ,, நட்பு.
8 ,, இணை.]

13. உலகமலைவு. உலகொழுக்கத்துக்கு மாறுபடக் கூறுவது.

(உ-ம்.) 'அலைகடல்க ளேழுந்தூர்த் தந்தரத்தி னூடே
மலையனைய மால்யானை யோட்டிக்—கலவாரை
நீறாக்கி வையநெடுங் குடையின்கீழ் வைத்தான்
மாறாச்சீர் மாநிலத்தார் மன்.'

14. நியாயமலைவு. நியாய நூல் கூற்றுகளில் ஒருவர் சொன்னதைப் பிறர் சொன்னதாகக் கூறுவது.

(உ-ம்.) 'ஆய பொருள்கள் கணந்தோ றழியுமெனத்
தூய வசோகின் முனியுரைத்த—தாய்வன்றே
காதலர் நீங்க வெழுங்காம வெங்கனல்வாய்
மாதருயிர் தாங்கு மாறு.'

[புத்தன் கூற்றை அருகன் கூற்றாக்கி யுள்ளது.]

15. ஆகமமலைவு. சாஸ்திரங்களிற் கூறியதற்கு மாறாகக் கூறுவது.

(உ-ம்.) 'தெய்வம் விருந்தொக்கல் தென்புலத்தார் தாமென்னும்
ஐவகையுந் தம்பொருள்கொண் டாற்றுவார்—மையிலா
முக்கோலுங் கற்றோய் முழுமடியுந் தாங்கியே
தக்கோ ரெனப்படுவோர் தாம்.'

PRINTED BY P. R. R. AND CO., MADRAS.